சரஸ்வதி

ஆசிரியர். வ. விஜயபாஸ்கரன்



இலக்கிய மாத இதழ். 2 அ

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

மலர் 2 இதழ் 3 | மார்ச் 1956 | மன்மத மாசி

அஞ்சலி

இந்திய வரலாற்றில் சென்ற மாதம் மிகவும் துக்ககரமான மாதம். இந்திய மக்களின் ஒப்பற்ற தவப்புதல்வர்கள் மூவர் நம்மை விட்டுப் பிரிந்து விட்டனர்.

தமிழ் இலக்கியத்திற்கும், தமிழ் நாட்டுக்கும் மகத்தான சேவை செய்த பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை பிப்ரவரி மாதம் 17-ம் தேதி காலமானர். தமிழ் ஆராய்ச்சித் துறையில் விருப்பு வெறுப்பில்லாமல் நடுநிலைமை நின்று பல அரிய உண்மைகளைக் கண்டு பிடித்தவர் அவர். அவரது முடிவுகள் பல, வருங்கால ஆராய்ச்சிக்காரர்களுக்கு மிகவும் உதவும். அவரது மறைவு தமிழ்நாட்டுக்கு ஈடுசெய்ய முடியாத நஷ்டம்.

இந்தியாவில் சோஷலிஸக் கருத்துக்களை விளைத்தவர்களில் குறிப்பிடத் தக்கவர் ஆசாரியா நரேந்திர தேவ் அவர்கள். விடுதலை இயக்கத்தில் முன்னணியில் இருந்ததைப் போலவே கல்வித் துறையிலும் முதல்வராக நின்றார்.

பாரத நாட்டின் விஞ்ஞானிகளில் முதல் வரிசையில் நின்ற அணுசக்தி விஞ்ஞானி மேகநாத் சாகா விஞ்ஞானத் துறையில் மட்டுமல்லாமல் தேசீய இயக்கத்திலும் தன்னலமற்ற சேவை செய்தவர்.

ஆசாரியா நரேந்திர தேவ், மேகநாத் சாகா – இருவரின் மறைவு இந்திய நாட்டுக்கே மிகப் பெரிய நஷ்டம்.

மறைந்த இந்த மூன்று பெரியார்களுக்குப் 'சரஸ்வதி' அஞ்சலி செய்கிறாள்.

அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்ந்து நிறைவேற்றுவதின் மூலம் அவர்களின் நினைவை என்றும் பசுமையாக வைத்திருப்போம்.

விறுவிறுப்புடன் விற்பனையாகிறது!

பிரபல முற்போக்கு எழுத்தாளர்
இளங்கீரனின்

பாரதி கண்ட சமுதாயம்

மக்கள் கவி பாரதியாரைப் பற்றிய ஒரு ஆராய்ச்சி ஏடு. புரட்சிக் கவி பாரதி, சமுதாயமும் அதன் வாழ்வும் எப்படியிருக்கவேண்டுமென்று கனவு கண்டான் என்பதையும், அவனுடைய இதய முழக்கத்தையும், இலட்சிய கீதத்தையும் தெளிவாக விளக்கிக் காட்டும் அரிய நூல்.

விலை ரூ. 1-4-0

கிடைக்குமிடம்:

நவபாரத் பப்ளிஷிங் ஹவுஸ்
தபால் பெட்டி 1940
சென்னை-1

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
199, மவுண்ட் ரோட்
சென்னை-2

குறிப்பு:—விற்பனையாளர்களுக்கு 25% கழிவுண்டு

அறிவிப்பு

இலங்கையில் "சரஸ்வதி"

கிடைக்குமிடம்:

மோகன் குமார் அன் கோ,
௬௭, முதலாம் குறுக்குத் தெரு
கொழும்பு

கபூர் பிரதர்ஸ்
1, பெரிய கடை
யாழ்ப்பாணம்

சிறுகதை

பணமும் படிப்பும்

ஆலாலசுந்தரம் ★

நானது அறையின் ஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டிருந்தான் பாண்டியன். அவன் மனம் நிம்மதியற்றுத் தவித்துக் கொண்டிருந்தது. இடைவிடாது புகைந்துகொண்டிருந்த எண்ணங்களுக்கு அளவேயில்லை. ஒவ்வொரு எண்ணமும் அவனது உள்ளத்தில் புயலை எழுப்பியது.

உயிரற்ற சிலையைப்போல அவன் அசைவற்று உட்கார்ந்துகொண்டிருந்தான். உள்ளத்தில் வீசிக்கொண்டிருந்த அத்தனை பெரிய பெரிய அலைகளும் வெளிப்புறத்தில் ஒரு சிறிய சலனத்தையும் ஏற்படுத்தவில்லை. அவனது கண்கள்கூட இமைக்கவில்லை. அந்த நாற்காலியில் அவன் அப்படியே உட்கார்ந்து கிடந்தான்.

ஒரு மின்சார விளக்கு அவனது தலைக்கு மேல் தொங்கிக்கொண்டிருந்தது. அந்த விளக்கின் பிரகாசமான வெளிச்சத்தில் அவன் உடல் குன்றி, உள்ளங் குன்றி உட்கார்ந்துகொண்டிருந்தான். பாதித் திறந்து கிடந்த அந்த சன்னலுக்கு வெளியே, அடர்ந்து வளர்ந்திருந்த அந்தப் பிரம்மாண்டமான நாகலிங்க மரத்துக்கு அப்பால், ஒரே அந்தகாரம். அப்பால் இருந்த அத்தனை பொருள்களையும் தனது ராட்சஸ வயிற்றுக்குள் போட்டுக்கொண்டு பரந்து விரிந்து கிடந்தது அந்தக் காரிருள். அந்த அந்தகாரத்தினுல் தீண்டமுடியாத ஒளிமிகுந்த அறையில் அவன் இன்று அமர்ந்துகொண்டிருந்தான். ஆனுல் நாளைக்கு?...

இந்த இன்றைக்கும் அந்த நாளைக்கும் இடையில் இன்னும் இருபத்து நான்குமணி நேரங்கூட இல்லை. இன்றைக்கு இந்த ஒளிமிகுந்த அறையில் உட்கார்ந்துகொண்டிருக்கும் பாண்டியன், நாளைக்கும் இங்கேயே உட்கார்ந்துகொண்டிருக்கமாட்டான். ஒரு பெரிய அலை, அது அவனை அப்படியே அந்த இடத்தைவிட்டு அடித்துக் கொண்டுபோய்விடும். நேற்று, இன்று, நாளை—இவைகளுககிடையில் எவ்வளவோ பெரிய மாற்றம்! பாண்டியனது வாழ்க்கையின்மேல் ருத்திரன் பயங்கர ஆவேசத்தோடு தனது சர்வநாச ஊழிக்கூத்தை நடத்திக் கொண்டிருந்தான்.

நேற்று அவன் சென்றுவந்த

அந்தக் கல்லூரி, இன்றைக்கு வெகு தொலைவில் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. ஆமாம், உண்மையிலேயே அது இப்பொழுது அவனுக்கு எட்டாத தூரத்தில்தான் இருந்தது. நாளைக்கு கல்லூரி, படிப்பு - எல்லாவற்றையும் அவன் மறந்துவிடவேண்டியதுதான்.

அவனுக்கெதிரில் ஒரு மேசை. அதன்மேல் அவன் படித்த புத்தகங்கள், நோட்டுகள் எல்லாம் ஒரு பையில் போட்டுவைக்கப் பட்டிருந்தன: மேசை காலியாக இருந்தது. புத்தகம், பேனா, காகிதம் ஒன்றுமே அதன்மேல் இல்லை. அந்த மேசையைப் போல்தான் அவனது மனமும் வெறிச்சோடிப்போயிருந்தது

அவனது கல்லூரி வாழ்வின் முதல் ஆண்டு அதுதான். இண்டர் முதல் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவன் கல்லூரிக்கு வந்து சரியாக நான்கு மாதங்கள்தான் முடிந்திருந்தன......கல்லூரியில் இடம் கிடைத்து, உள்ளே அடியெடுத்துவைத்தபோது தனது வருங்காலத்தைப்பற்றி எத்தனை எத்தனையோ கனவுகள் கண்டான். இண்டர் முடிந்ததும், பி.ஏ., எம்.ஏ.—இப்படிக் காலத்தையும் ஞாலத்தையும் கடந்து பறந்து சென்றன அவனது எண்ணங்கள்!...ஆனால்? இவ்வளவு சீக்கிரமாகவா அவனது கல்லூரிப் படிப்பு முடிந்து போய்விடவேண்டும்? இப்படி நேரும் என்று ஒரு கண நேரம்கூட அவன் எண்ணிப் பார்த்ததில்லை. ஆனால் அவனது எண்ணம், ஆசை எல்லாம் நான்கே மாதத்தில் சிதைந்து போய்விட்டன. அவனைப் பொறுத்தவரை அவைகள் எல்லாம் நீரின்மேல் எழுத்துக்கள்; எழுதின அதேநிமிஷம் அழிந்து போய்விட்டன. அடிச்சுவடு கூடத் தெரியாமல் மறைந்து போய் விட்டன. பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய்க் கலைந்து போய்விட்டன.

படீரென்று கதவைத் திறந்துகொண்டு அவனது அறையன்பர் ராமச்சந்திரன் உள்ளே நுழைந்தார். அவரைத் தொடர்ந்து ஐந்தாறு நண்பர்களும் அறைக்குள் புகுந்தனர். உடனே அமைதி நிலவிக் கொண்டிருந்த அந்த அறையில் ஒரே இரைச்சல். அவர்களது கூப்பாடும் கும்மாளமும் அந்த 'ஹாஸ்டல்' கட்டிடத்தையே ஒரு குலுக்கு குலுக்கியது.

ஒரு மாணவர் உரத்த குரலில் "ராமச்சந்திரனுக்கு..." என்று கோஷமிட்டார்.

மற்றவர்கள் எல்லோரும் "ஜே, ஜே, ஜே!" என்று தங்கள் தொண்டை கிழியும்வரை கத்தினர். இதைத் தொடர்ந்து பலத்த சிரிப்பு அவர்களிடமிருந்து எழுந்தது. அடுத்த நிமிஷம் அந்தக் கும்பலில் மிகுந்த ஆவேசங்கொண்ட நண்பர் ஒருவர் ராமச்சந்திரனை அப்படியே தூக்கிக்கொண்டு ஒரு சுற்றுச்சுற்றி ஆடினார். மீண்டும் மீண்டும் சிரிப்பொலியும், சீழ்க்கைச் சப்தமும் அந்த

அமைதியான இருளைக் கிழித்து, அருகிலிருப்போர் காதையும் கிழித்து, அந்த இரட்டைமாடி கட்டிடத்தையும் நடுங்கச் செய் தன.

"டேய், நமக்கு இன்னும் குறைஞ்சது பத்து நாளைக்கா வது பஞ்சமில்லை! நேத்து 55 ரூபாய், இண்ணைக்கு 48 ரூபாய்!...ஆமா, நமக்கு பஞ் சமேயில்லை. இந்த ராமச்சந்தி ரன் இங்கே இருக்கிறவரைக் கும், அவரு பாக்கெட்டுலே ரூபா நோட்டு இருக்கிறவரைக்கும் நமக்கு ஒரு பஞ்சமும் இல்லை!... ராமச்சந்திரனுக்கு ஜே!" என்று தன்னுடைய துதியை, தனிப் பட்டமுறையில் பாடினர் மற் ருெரு மாணவர்.

நேற்று 55 ரூபாய், இன்று 48 ரூபாய். இன்னும் பத்து நாட்களுக்குப் பஞ்சமே இல்லை!

உண்மை; கலப்பற்ற உண் மை! ராமச்சந்திரன் பெரிய பணக்காரன் வீட்டுப் பிள்ளை. தஞ்சாவூர் ஜில்லாவில், காவிரி யாற்றங்கரையில் எண்பதுவேலி அசல் நன்செய்க்குச் சொந்தக் காரர் அவர். மாதாமாதம் 200 ரூபாய் வீட்டிலிருந்து வந்து விடும். தினந்தோறும் சினிமா, சிகரெட்டு, இன்னும் எல்லாம்! காலையும் மாலையும் அவரைச் சுற்றிவட்டமிடும் பக்தகோடி கள்! இந்த லட்சணத்தில் இரு நூறு ரூபாய் எந்த மூலைக்கு? எனவே, பற்றுக்குறையைப் போக்க அரசாங்க உபகாரச் சம்பளம் (ஸ்காலர்ஷிப்) வேறு கிடைத்துவந்தது அவருக்கு!

பிறகு அவருக்கென குறைச் சல்!......தினம் சீட்டாட்டம்! இரவு பகலென்ற வேறுபாடு இல்லை. பகலாயினும் சரி, இர வாயினும்சரி, தலைக்குமேல் மின் சார விளக்கு எரிந்துகொண் டிருக்க, வாயில் இடைவிடாது சிகரெட் புகைந்துகொண்டிருக்க ரூபாய் நோட்டுகள் சலசலக்க— ஆட்டத்தில் மெய்மறந்து, நேரம் செல்வதைப்பற்றிய சிந்தனையே இன்றி உட்கார்ந்துகொண்டி ருப்பார் ராமச்சந்திரன் தனது பரிவாரம் சூழ. ஆனல் ராமச் சந்திரனுக்கும் வெற்றிக்கும் வெகுதூரம். நேற்று 55 ரூபா யைத் தோற்ருர்; இன்று 48 ரூபாயைத் தோற்ருர். நேற்று வந்த உபகாரச்சம்பளப் பணம் துரிதமாகக் கரைந்துகொண் டிருந்தது. ஆயினும் இன்னும் பத்துநாளைக்குப் பஞ்சமில்லை!

"உம், சீக்கிரம் ஆகட்டுமப்பா! மணி ஒன்பதாச்சு. 'நியூஸ் ரீல்' ஓடிடப் போகிறது! புல்கானின் குருசேவ் மெட்ராசுக்கு வந்த தைக் காட்டுருனும்" என்று ராமச்சந்திரனைத் துரிதப்படுத்தி னர் இன்னெருரு மாணவர்.

ராமச்சந்திரன் ஒரு புதிய 'சில்க்' சட்டையை எடுத்துப் போட்டுக்கொண்டார். 'சென்ட்' புட்டியைத் திறந்து சட்டையின் மேல் லேசாகத் தடவினர். கைக் குட்டையிலும் தடவிக்கொண் டார். எல்லோரும் ஆங்கிலப் பாடல்களைப் பாடிக்கொண்டு வெளியே சென்றனர். காதைத் துளைக்கும் அந்த இரைச்சல்

சற்று நேரத்தில் மடிந்து போயிற்று.

பாண்டியன் மீண்டும் தனது இருண்ட மனக்குகைக்குள் நுழைந்துவிட்டான். அவன் நெஞ்சு அவனையே சுட்டது. பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை.

அரசாங்க உபகாரச் சம்பளம் கிடைக்குமென்று உறுதியாய் நம்பினான். அரைக்காணி புன் செய் நிலம், ஒரு ஜதை உழவு மாடுகள், தனது இரண்டு கை கள்—இவைகளையே நம்பிப் பிழைத்துவந்த தன் தந்தைக் கும் நம்பிக்கை ஊட்டினான். அர சாங்க உபகாரச்சம்பளம் கிடைக் கும். தன் மகன் பி. ஏ.; எம். ஏ. படித்துவிட்டு நான்கு பேர் மதிக்க திரும்பி வருவான், கலெக்டர் உத்தியோகம், இல்லா விட்டால் தாசில்தார் பதவியா வது கிடைக்கும்—என்று கனவு கண்டு அவனுடைய அப்பன் கடன் வாங்கிப் பணம் அனுப்பி னான்.

ஆனால் எல்லாக் கனவுகளும் இன்று புதைந்து போயின. நம் பிக்கைகள், ஆசைக் கோட்டை கள் எல்லாம் தகர்ந்து போய் விட்டன. நான்கு மாத காலத் தில் எல்லா எண்ணங்களும் சிதறுண்டு போயின.

மணியோசை கேட்டது. சாப் பாடு நேரம் முடிந்துவிட்டது. ஆனால், பாண்டியன் சாப்பிடவே இல்லை. அவனுக்குப் பசி எடுக் கவே இல்லை.

அவன் தந்தை எழுதியிருந்த அந்தக் கடிதம்! அதை அவன் இதுவரை நான்கைந்து தடவை கள் திரும்பத் திரும்பப் படித்து விட்டான். அவனது மனதில் ஒவ்வொரு வரியும் அப்படியே பதிந்துவிட்டன ஆயினும், மீண்டும் அந்தக் கடிதத்தைக் கையில் எடுத்தான். பிரித்தான், இன்னொருமுறை படித்தான் :

"சிரஞ்சீவி மகனுக்கு,

உன்னுடைய கடிதம் நேற்று தான் கிடைத்தது. உபகாரச் சம்பளம் கிடைக்கவில்லை என்று எழுதியிருந்தாய். என்ன செய் வது? யாரை நோவது? நமக் குக் கொடுத்து வைத்தது அவ் வளவுதான்!

"எட்டாத பழத்துக்குக் கொட் டாவி விட்டோம். ஏழையின் ஆசை அவ்வளவுதான். விரலுக் கேற்ற வீக்கம் என்று பெரியவர் கள் சொல்வார்கள். ஆனால், நம் முடைய ஆசைதான் பெரியது.

"இன்றுவரை கடனும் வட்டி யும் முன்னூறு ரூபாய்க்குமேல் ஆகின்றன. நிலத்தையும், மாடு களையும் விற்றுக் கடனை அடைத்துவிட வேண்டியது தான். வேறு வழியில்லை.

"கைகால்கள் இருக்கின்றன. கைகால்களைத் தவிர ஏழைக்கு வேறு என்னதான் சதம்? உன் தம்பியும் கையெழுத்துப் போட கற்றுக்கொண்டான். ஏழைக்குக் கடன் பத்திரத்தில் கையெழுத் துப் போடும் அளவுக்குப் படிப்பு போதாதா? எனவே, அவனை யும் சில நாட்களுக்கு முன்பு தான் பள்ளிக்கூடத்தை விட்டு

நிறுத்திவிட்டோம். அவனும் உன் பெரிய தங்கையும், பெரிய பண்ணையார் வீட்டில் மாடுகளை மேய்க்கிறார்கள்."

பாண்டியனுக்கு ஒரு தம்பி. நான்கு தங்கைகள். என்ன செய்வது? இனிமேல் இத்தனை உயிர்களும் ஒருசில கைகளை நம்பித்தான் பிழைக்கவேண்டும். தாய், முடக்கு வாதத்தால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு நோயாளி! நிலம், மாடுகள் எல்லாம் போய்விட்டன. எலும்பும் தோலுமான சில கைகள்தான் மிச்சம்! பாண்டியனது கண்களிலிருந்து அவனையும் அறியாமல் சில கண்ணீர்த்துளிகள் வழிந்து விழுந்தன. உலகமே அவனுக்கு வெறிச்சோடிப் போயிருந்தது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்து படித்தான்:

"கடிதம் கண்டவுடன் புறப்பட்டுவிடவும். படிப்பு போதும். இங்கு எல்லோரும் உனது வருகையை எதிர்நோக்கி இருக்கிறோம். உனது தாய் உன்னையே எப்பொழுதும் நினைத்துக்கொண்டிருக்கிறாள். உடனே புறப்பட்டு வரவும். மற்றவை நேரில்..."

கடிதத்தை மடித்து எதிரிலிருந்த மேசைமீது வைத்தான்.

நிராசை அவனது உள்ளத்தை அரித்தது. அவன் மனம் குமைந்துகொண்டேயிருந்தது.

சற்று நேரம் கழிந்தது. அந்த ஹாஸ்டலுக்கு அருகில் ஒரு ரயில் பாதை. அதன்மேல் 'கூ' வென்று கத்திக்கொண்டு, சென்னை மாநகரத்தை விட்டு விடை பெற்றுக்கொண்டு ஓடியது ஒரு ரயில். அதே ரயிலில் அடுத்த நாள் அவன் பயணம் செய்துகொண்டிருப்பான்!

ரயிலைப் போன்றதொரு நீண்ட பெருமூச்சு; ஒரு சொட்டுக் கண்ணீர். கல்லூரி, படிப்பு—எல்லாம் மறைந்தொழிந்துவிடும்.

இந்தியாவில் இனிமேல் எல்லாத் துறைகளிலும் மெட்ரிக் அளவு முறையையே கையாளவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அது அமுலாவதற்குச் சிறிது காலம் பிடிக்கும். அதுவரையில் மக்கள் அதைப் பற்றித் தெரிந்து பழக்கம் ஏற்படவேண்டும். மெட்ரிக் முறை வந்த வரலாற்றைப்பற்றியும், அதன் அனுகூலங்களைப்பற்றியும் விவரித்து திரு. **பீதாம்பர் பந்த்** எழுதியுள்ள கட்டுரையின் சுருக்கம் இங்கே தரப் படுகிறது.

★

மெட்ரிக் அளவு முறை

★

பீதாம்பர் பந்த்

இந்தியாவில் இப்போது எத்தனையோ வகை வகையான அளவு முறைகள் அமுலில் இருந்து வருகின்றன. நீளம், பரப்பு, பருமன், எடை முதலிய வைகளைக் குறிக்கும் நீட்டலளவை, முகத்தலளவை, நிறுத்தலளவை, விஸ்தீர்ண அளவை முதலியவை விதம் விதமாக இருந்து வருகின்றன. ஒரே பேருள்ள அளவுகள் கூட எத்தனையோ இருக்கின்றன. "சேர்" தான் எத்தனை? படிதான் எத்தனை? "மணங்கு" தான் ஒன்று, இரண்டா? இந்தப் பிரச்னை தேசீய மாதிரி பரிசீலனையின்போது தெளிவாகத் தெரிந்தது. 1100 கிராமங்களில் 143 வகை வகையான அளவு முறைகள் இருந்ததாகத் தெரிய வந்தது. மணங்குகளில் 100 விதம் இருந்தன. 280 தோலா கொண்ட மணங்கு முதல் 8320 தோலா கொண்ட மணங்கு வரை இருந்தன. (ஸ்டாண்டர்ட் மணங்கு = 3200 தோலா) 8 தோலா கொண்ட சேர் முதல் 160 தோலா கொண்ட சேர் வரை இருந்தன. (ஸ்டாண்டர்ட் சேர் = 80 தோலா)

இவ்வாறு தேசத்தின் ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரை விதம் விதமான அளவுகள் இருக்கிறபடியால், தினசரி வாழ்க்கையும், நடவடிக்கைகளும், வியாபாரமும் பெரும் சிக்கலாகிவிடுகின்றன. வியாபாரத்தில் ஏமாற்றமும் பித்தலாட்டமும் ஏற்பட வழி உண்

டாகிறது. பாமர மக்கள் பெரிதும் ஏமாறுகிறார்கள்.

இந்தியா முழுவதுக்கும் ஒரே ரீதியான அளவு வரையறைகளை விதித்தால் இந்த அவல நிலை தீரும். இந்த அவசியத்தை பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே இந்திய சர்க்கார் உணரத்தான் செய்தார்கள். 1871ல் இதற்காக ஒரு சட்டமும் இயற்றப்பட்டது. தேசம் நெடுகிலும் ஒரே ரீதியாக மெட்ரிக் முறையை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு அது வழி செய்தது. ஆனால் அது தீவிரமாக அமுல் செய்யப்படவில்லை. குழப்ப நிலை நீடித்துவந்தது.

சமீபத்தில் இந்திய சர்க்கார் செய்துள்ள முடிவு அவர்கள் இந்த விஷயத்தை உறுதியாக நடத்தி முடிக்கத் தீர்மானித்திருப்பதை எடுத்துக்காட்டுகிறது.

சர்க்கார் செய்துள்ள முடிவுப்படி இந்தியா முழுவதிலும் ஒரே நிர்ணயமான முறையில் மெட்ரிக் அளவுகள் அமுலுக்கு வந்தால் வர்த்தகம், தொழில் முதலியவைகளுக்கு வசதி ஏற்படும் என்பதுடன், தேச ஐக்கியமும், சர்வதேச ஒருமைப்பாடும்கூட உருவாவதற்கு வழி ஏற்படும் என்று கூறலாம். ஏனென்றால் உலகத்தில் அமெரிக்கா, பிரிட்டன், காமன்வெல்த் நாடுகள் ஆகியவை தவிர, இதர சகல நாடுகளிலும் மெட்ரிக் முறைதான் அமுலில் இருக்கிறது. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் கூட, அடி, பவுண்ட் முறையுடன் கூட்டாகப் பல துறைகளில் மெட்ரிக் முறையும் இருந்துவருகிறது. படிப்படியாக அதன் உபயோகம் அதிகரித்து வருகிறது.

மெட்ரிக் முறைதான் விஞ்ஞான ரீதியில் உருவாக்கப்பட்ட சுலபமான முறை; அதுதான் சகலவித அளவுகளையும் ஒன்றாய் இணைத்துத் தொடர்பு படுத்துகிற முறை; சர்வதேசரீதியில் சகலரும் ஏற்றுக்கொள்ளத்தக்க விஸ்தாரப் பழக்கமுறை. அது 10 என்ற எண்ணின் அடிப்படையிலேயே முழுக்க அமைந்திருப்பதால் ஒரே அடுக்காக அதிகரித்தும், குறைந்தும் வரக் கூடியது. ஒன்று என்னும் இலக்கத்திலிருந்து மேலே போனாலும் பின்னங்களாகக் கீழே கீழே (கீழ்வாய் இலக்கமாக அரை, கால், அரைக்கால் என்று) போனாலும் கட்டுக் கோப்பும் உருவமும் சிதையாத நிலையில் உருவாகக்கூடிய திட்டம் அதுதான். 10 என்ற அடிப்படையும், ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட பின்னங்களைக் குறிக்க தசாம்சப் புள்ளிக்குறியீடும் (டெசிமல்) இணையும்போது கணித முறை முழுவதுமே வெகு சுலபமாகி விடுகிறது. குழப்பமோ சங்கடமோ சிறிதும் ஏற்பட இடமில்லை.

ஒன்றுமுதல் பத்துவரை உள்ள பத்துக் குறியீடுகளை வைத்துக்கொண்டு "உலகத்தை எல்லாம்" அளந்துவிடுகிற விசேஷக் குறியீட்டுமுறை

இந்தியா உலகத்துக்குக் தந்த முறையாகும். ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னமேயே இந்தியாவில் இந்த ஸ்தானமுறை உருவாகிவிட்டது ஒன்று, பத்து, நூறு, ஆயிரம் முதலிய அத்தனை இலக்கங்களையும் "1" என்னும் இலக்கத்தையும் "0" என்னும் சுழியையும் ஸ்தானப்பிரகாரம் அடுக்கிக்கொண்டே போவதன் மூலம் இந்த எண்கள் உருவாகிவிடுகின்றன , உதாரணம்; 1 (ஒன்று); 10 (பத்து); 100 (நூறு); 1000 (ஆயிரம்). 777 என்ற இலக்கத்தில் வலது கோடியிலுள்ள "7" வெறும் ஏழையும், நடுவில் உள்ள "7" எழுபதையும்; இடதுகோடியில் உள்ள "7" எழுநூறையும் குறிப்பிடு கிறது ஒரே இலக்கம் ஸ்தானவேறு பாட்டால் மதிப்பில் உயரவோ, குறையவோ செய்கிறது. இந்தக் கணித வழியை வகுத்துத் தந்த பெருமை இந்தியாவைச் சேர்ந்ததாகும்.

இந்தியாவில் உதயமான ஸ்தான முறையை மேனாடுகள் கையாளுவதற்கு முன் அங்கே மிகவும் சிக்கலான முறைதான் வழக்கிலிருந்தது. ரோமன் இலக்கங்கள் அங்கே அமுலில் இருந்தன (I, II, III, IV, V,VI, VII, VIII, IX, X, L, C, M). இலக்கங்களைக் கூட்டவும் கழிக்கவும் சுலபக்கணக்குப் போட்டுச் சொல்லமுடியாதபடி இருந்தது. 'அபாக்கஸ்" என்னும் சட்டத்தில்தான் கூட்டிக் கழிக்கவேண்டியதாக இருந்தது. அப்போது நிலவிய கஷ்டத்தை உணர்வதற்கு ஒரு சிறு கதை: 15-ம் நூற்றாண்டு ஜெர்மன் வியாபாரி ஒருவர் தம் மகனுக்கு வியாபாரக் கல்வி அளிக்க விரும்பி ஒரு சர்வகலாசாலைப் பேராசிரியரிடம் ஆலோசனை கேட்டார். "கூட்டவும் கழிக்கவும் தெரிந்தால் போதுமென்றால், ஜெர்மன் சர்வகலாசாலையில் படிப்பித்தால் போதும்; இல்லை, பெருக்கவும் வகுக்கவும் தெரியவேண்டுமானால் இத்தாலி தேசத்துச் சர்வகலாசாலைக்கு அனுப்புங்கள்; அங்கேதான் கணிதம் நன்றாகப் போதிக்கப்படுகிறது; இத்தகைய உயர்தரக் கல்வியை அங்கேதான் பெறமுடியும்" என்று அந்தப் பேராசிரியர் பதில் கூறினாராம். பெருக்கலும், வகுத்தலும் அந்நியதேசம் சென்று கற்கவேண்டிய உயர்தரக் கல்வியாயிருந்தது. XIV (14) என்ற ரோமன் எண்ணையும் XL (40) என்ற எண்ணையும் பெருக்குவதற்கு முயன்று பார்த்தால் அக்காலத்து மக்களுக்கிருந்த சங்கடம் நன்கு தெரியவரும். இதற்கெல்லாம் காரணம் அந்த எண்வரிசை முறைதான்; அது செப்பமாக அமையவில்லை; நெளிவுசுளிவு கிடையாது; சுலபமான விதிகளை அனுசரித்து அவைகளைக் கையாள முடியவில்லை. ஸ்தான முறை இலக்கங்கள் வந்தபின் இந்த இடர்ப்பாடெல்லாம் போய்விட்டது. வெறும் "மக்கு" கூட கணக்குப்போட வசதி ஏற்

பட்டுவிட்டது. ஆயிரக்கணக்கான வருஷங்களாய் இருந்த தேக்க நிலை தீர்ந்து கணிதத் துறை துரித அபிவிருத்தியடைவதற்கு அது வழிசெய்துவிட்டது. ஆதி ஹிந்துக்கள் கண்டுபிடித்துத் தந்த இந்த ஸ்தான வரிசை இலக்க அடிப்படையில்தான் தற்கால விஞ்ஞான–தொழில்நுட்ப அபிவிருத்திகள் உருவாகியிருக்கின்றன. இந்தியராகிய நாம் இது பற்றிப் பெருமையடையலாம்.

மெட்ரிக் முறை என்பது, "மீட்டர்" என்னும் அளவை அடிப்படையாகக் கொண்டது. நிர்ணயமான மீட்டர் என்பது, பிரான்ஸ் தேசத்தில், பாரிஸ் நகருக்கு சமீபத்தில் உள்ள ஸெவெர்சில், சர்வதேச மெட்ரிக் கமிஷன் காரியாலத்தில் வைக்கப்பட்டுள்ள ஒரு தண்டில் குறியிடப்பட்டிருக்கும் இரு கோடுகளுக்கு மத்தியில் உள்ள நீளம்தான். மீட்டரைப் பத்துப் பத்தாகப் பெருக்கி மேல் எண்களும் பத்துப் பத்தாக வகுத்துக் கீழ் பின்னங்களும் குறிப்பிடப்படும். மேல் எண்களைக் குறிப்பதற்கு கிரேக்க அடைமொழிகளும், பின்ன எண்களைக் குறிப்பிடுவதற்கு லத்தீன் அடைமொழிகளும் கையாளப்படுகின்றன, மீட்டர்–ஒரு மீட்டர்; டெக்கா மீட்டர் – பத்து மீட்டர் (கிரேக்க மொழியில் டெக்கா என்பது பத்து மடங்கு) ஹெக்டாமீட்டர் – நூறு மீட்டர் கிரேக்க மொழியில் ஹெக்டா என்பது நூறு மடங்கு); கிலோ மீட்டர்–ஆயிரம் மீட்டர் (கிரேக்க மொழியில் கிலோ என்பது ஆயிரம் மடங்கு) கீழ்க் கணக்கில் டெசி மீட்டர் – 1/10 மீட்டர்; மீட்டரில் பத்தில் ஒரு பங்கு (லத்தீன் பாஷையில் டெசி என்பது பத்தின் பகுதியைக் குறிக்கும்); செண்டிமீட்டர் 1/100; மீட்டரில் நூறில் ஒரு பங்கு (லத்தீன் பாஷையில் செண்டி என்பது நூறில் ஒரு பகுதி); மில்லி மீட்டர் 1/1000; மீட்டரில் ஆயிரத்தில் ஒரு பங்கு (லத்தீன் பாஷையில் மில்லி என்பது ஆயிரத்தில் ஒரு பகுதி.)

நீளத்தைக் குறிக்க "மீட்டர்" இருப்பதுபோல், பருமனைக் குறிக்க, "லீட்டர்" எடையைக் குறிக்க, "கிராம்" என்னும் அளவுகள் அடிப்படை அளவுகளாக இருக்கின்றன. "ஆர்" என்பது பரப்பளவைக் குறிக்கும் அடிப்படை. மீட்டர், லீட்டர், கிராம் ஆகியவைகளுக்கிடையிலும் ஒரு சுலபமான தொடர்பு இருக்கிறது. ஒரு செண்டிமீட்டர் நீளம், ஒரு செண்டிமீட்டர் அகலம், ஒரு செண்டி மீட்டர் உயரம் உள்ள ஒரு குழியில் உள்ள சுத்தத் தண்ணீரின் எடைதான் ஒரு "கிராம்." இது மிகச் சிறிய அளவாகுமாதலால் அதன் ஆயிரம் பங்கு; அதாவது; கிலோகிராம் தான் சாதாரண எடை அளவாகும். மீட்டர் என்பது, ஒரு கிலோகிராம் எடையுள்ள சுத்தத் தண்ணீரின் கன பரிமானம்தான்; அதாவது அதன் பருமன், திரட்சி அல்லது

முகத்தல் அளவை. ஆங்கில வாய்ப்பாட்டின்படி அங்குலத்தைப் பன்னிரண்டால் வகுத்து அடியையும், அதை மூன்றால் வகுத்து கஜத்தையும் கண்டுபிடிக்க வேண்டும். மெட்ரிக் முறையில், தசாம்சப் புள்ளியை உபயோகித்து அதன் இடமாற்றத்தால் மேலினங்களைக் கண்டுபிடித்து விடலாம்.

8 அடி $9\frac{1}{2}$ அங்குலம் நீளம், 6 அடி $5\frac{1}{2}$ அங். அகலம், 4 அடி $3\frac{1}{2}$ அங். ஆழம் உள்ள குளத்தின் குழி அளவு எவ்வளவு; அதிலுள்ள தண்ணீரின் முகத்தலளவை (காலன் கணக்கில்) எவ்வளவு; அதன் எடை (பவுண்ட் கணக்கில்) எவ்வளவு – என்று கண்டுபிடிப்பதாயிருந்தால் அது மிகச் சிக்கலாயிருக்கும்; முதலில் அங்குலமாக மாற்றி பிறகு, பெருக்கி, அதை 1728 கொண்டு வகுத்து, கன அடிப் பரிமாணம் கண்டுபிடிக்க வேண்டும்; கன அங்குலத்தை 231 கொண்டு வகுத்து காலன் கணக்குப் பார்க்க வேண்டும்; கன அடியை $62\frac{1}{2}$ கொண்டு வகுத்து எடை கண்டுபிடிக்க வேண்டும். இந்த அளவுகளை மேலினம் அல்லது கீழினம் ஆக்க வேண்டுமானால், 27, 1728, 4, 8, 16, 112, 2240 முதலிய இலக்கங்களால் பெருக்கவும் வகுக்கவும் வேண்டும்.

இதற்குமாருக, மெட்ரிக் முறையில் தசாம்சப் புள்ளியை ஸ்தானம் மாற்றிப் பெருக்கினுல் போதும்; விடை கிடைத்து விடும். கன மீட்டரை 1000 கொண்டு பெருக்கி மீட்டர் அளவு தெரிவதற்கு மூன்று ஸ்தானம் வலப்புறமாகப் புள்ளிகளை மாற்றினுல் போதும். கிலோ மீட்டர், கிலோ கிராம் அளவுகளுக்கு இலக்கத்தை மாற்றவே தேவையில்லை; பெயரை மாத்திரம் மாற்றினுல் போதும்.

இந்தியாவில் நமக்குப் பலவித மானமுறைகளை இப்போது கற்க வேண்டியிருக்கிறது. உள்ளூர் முறை (உழக்கு, நாழி, படி, மரக்கால், பலம், தோலா, சேர், குழி, வேலி, கோட்டை, வீசை, மணங்கு), ஆங்கில முறை (அடி, கஜம், ஏக்கர், பவுண்ட், அந்தர், டன்), மெட்ரிக் முறை (அவுன்ஸ், டிராம்) முதலியவைகளைக் கற்க வேண்டியிருக்கிறது. இதனுல், நம் குழந்தைகளின் கல்வி தடைப்படுகிறது. ஒரு பாடத்தை அவர்கள் கற்பதற்கு அதிக நேரம் பிடிக்கிறது; ஜெர்மன், பிரெஞ்சு, ருஷ்ய, சீனக் குழந்தைகள் சீக்கிரமாகக் கற்று விடுகின்றன. நம் நாட்டில் நன்ருகக் கற்றுத் தேர்ச்சியுள்ளவர்கள் கூட, பலவித வாய்பாடுகளையும் அளவு அட்டவணைகளையும் மனப்பாடமாக ஒப்பிப்பது சாத்தியமல்ல. அவைகளைக் கொண்டு கணக்குப் போடுவதென்ருல், அதைவிட அதிக சிரமப்படுவார்கள்.

இவைகளை எல்லாம் கவனித்தால, மெட்ரிக் முறையைப் போல் சுலபமாகவும், விஞ்ஞான ரீதியில் உள்ளதும், திறமையை அபிவிருத்தி செய்வதும் வேறெதுவும் இல்லை என்பது நிரூபணமாகும். ★

★சிறுகதை

நான்கு அணுக்கள்

●

மூலம் :
ராஜேந்திர பிரபாகர்

தமிழாக்கம் :
குமாரி ஆர். சாவித்திரி

மாலை நேரம். கடைகள் மின் சார விளக்கின் ஒளியில் பிரகாசித்துக் கொண்டிருந்தன. அவற்றின் கவர்ச்சி அதிகரித்துக்கொண்டே வந்தது. கடைகளில் கூட்டம் அலை அலையாகப் பெருகியபடி இருந்தது. எப்புறத்திலும் அச்சூழ்நிலை மிக ரம்மியமாகவும், கவர்ச்சிகரமாவும் இருந்தது. தெருக்கள் கூட மிகக் கலகலப்பாக இருந்தன.

எதிரில் ஒரு தெரு முனையில் ஒரு கையை ரிக்ஷாவின் சிம்மாதனத்திலும், மற்றொரு கையை அதன் கைப்பிடியிலும் வைத்தவாறு ரகுவா நின்றுகொண்டிருந்தான். அவன் முகம் கவலை நிரம்பி இருந்தது. ஏன் இருக்காது? காலையிலிருந்து நான்கே அணுக்கள்தான் கூலியாகக் கிடைத்திருந்தன. ஆனால் பின்னும் அவன் அமைதியாக இருந்தான். என்ன சொல்வது? அதுவும் யாரிடம் சொல்வது? மேலும் இது இன்றைக்குமட்டும் ஏற்பட்ட புதிய விஷயம் அல்லவே! பெரும்பாலும் ஒருநாள் முழுவதும் ஓடியாடி உழைத்தாலும் கிடைத்த முழுக்கூலி அவனது வயிற்றை நிரப்பவே போதாது...இன்றோ வீட்டிலிருந்து நேரம் கழித்துத்தான் வந்திருந்தான். குழந்தை பகுதாவின் உடல் நிலையும் சரியில்லை!!

எதிரிலேயே ஒரு டாக்டரின் மருந்துக்கடை இருந்தது. ரிக்ஷாவின் மேல் கை வைத்தபடி நின்றிருந்தான். அவனது பார்வை தானகவே, டாக்டரின் கடையில் மேல் நிலைத்திருந்தது.....திடீரென்று ஒரு குழந்தையின் அழுகைக் குரல் அவனை ஈர்த்தது. அவனது சிந்தனையோட்டம் தடைப்பட்டது. திடீரென அவனுக்கு வீட்டுக்குப்போக வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. ஆனல் எக்காரணத்தினலோ, பேசாமல் நின்றுவிட்டான். சிந்திக்கத் துவங்கினன்.

"வீட்டிற்குப் போய்த்தான் என்ன செய்யப் போகிறேன்? ...பகுதாவும், பாவம், ஜுரத்தில் முனகிக் கொண்டிருப்பாள். 4 அணுவில் மருந்தோ கிடைக்காது...மேலும்..."

"ரிக்ஷா! ஸ்டேஷனுக்கு வருமா" திடீரென ஸூட் ஹேட்

அணிந்த ஒரு கனவான் கேட்டார்.

" ஸ்டேஷனுக்கா ?"

" ஆமாம் "

" ஏன் வராது, ஏறி உட்காருங்கள் "

" எத்தனே கேட்கிறே ?"

" சாமி எத்தனே கொடுத்தாலும் சரி "

" ஒரு ரூபாய் கிடைக்கும் "

" ஒரு ரூபாய் !!"

" சரி, சீக்கிரம், நேரமாகிவிட்டது "

அவன் ஒன்றும் பதில் கூருமல் ரிக்ஷாவை வேகமாக ஓட்டினன். ஒரு ரூபாய் கிடைக்குமென்ற ஆசை, அவன் உத்ஸாகத்தையும், வேகத்தையும் அதிகரித்தது. யோசிக்கத் துவங்கினன். இந்த ஒரு ரூபாய்க்குள் நிறைவேறப்போகும் தனது அபிலாஷைகளேப்பற்றி...... ஐயாவை ஸ்டேஷனில் இறக்கிவிட்டு, நேராக டாக்டர் வீட்டிற்குச் செல்வேன்.......அதன் பிறகு ரிக்ஷாவின் ப்ரேக்கையும் சரிப்படுத்த வேண்டும். அதன் பின் சவாரி கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.....இச் சிந்தனேயில் அவன் தன்னேயே மறந்துவிட்டான். தெருக்களில் நடப்பது எவையும் அவன் கண்களுக்குப் புலனுகவில்லே. ஒரு பெரிய லாரி (ட்ரக்) பெரிய இரைச்சலுடன் எதிரில் வந்த பொழுதுதான் அவனது சிந்தனேத் தொடர் அறுந்தது. அவன் அதில் மோதாமல் மயிரிழையில் தப்பித்தான்.

" பார்த்துப் போகக்கூடாதா" ரிக்ஷாவில் உட்கார்ந்திருந்த கனவான் அதட்டினர். அவன் தனது வேகத்தைச் சிறிது குறைத்தான்...பாபுஜியின் (கனவானின்) அதட்டலேக் கேட்டதும் அவன் மனம் அவரிடம், நீங்கள்தானே வேகமாக ஓட்டச் சொன்னீர்கள் என்று கேட்க விரும்பியது. ஆனல் வேறு வழியில்லாததால் மௌனியாக இருந்தான். 'சீக்கிரம் போ' கனவானின் அதிகாரத்துவனி திரும்பவும் கேட்டது, இத் தடவை அவனுல் பேசாமல் இருக்க முடியவில்லே....'ஐயா'... இந்த வார்த்தையினூடேயே, தெருவில் பக்கத்து சந்திலிருந்து மூன்று நான்கு வயது குழந்தை விளேயாடிக் கொண்டே தெருவில் ஓடி வந்தது. ரகுவா ரிக்ஷாவை நிறுத்த மிக முயற்சி செய்தான். ஆனல் அதற்குள், அதன் முதல் சக்கரம் குழந்தையின் மேல் ஏறி விட்டது. ரகுவா ஸ்தம்பித்து விட்டான். குழந்தை விடாமல் வீறிட்டது. கனவான் இறங்கி நன்ருக இரண்டு அறை கொடுத்துவிட்டு, குழந்தையை எடுத்து ஒரு பக்கம் விட்டு விட்டு, தனது கைப் பையை எடுத்துக்கொண்டு போய் விட்டார். இதற்குள் நாற்புறங்களிலிருந்தும் ஜனங்கள் வந்து சேர்ந்து விட்டனர். கூட்டத்தில் பலர் பலவிதமாக அவன்மேல் வசைமாரி பொழிந்து கொண்டிருந்தனர்...

'குருட்டு ராஸ்கல்'

'குழந்தையைக் காயப்படுத்தி விட்டான்'

'எல்லாவற்றிற்கும் முதலில் போகப் பார்த்தான்'

'ஏன் குடித்திருப்பான்'

'இந்தப் பயல்கள் பார்த்து ரிக்ஷா ஓட்டுவதில்லை.' ரகுவா அழுது கொண்டே, எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான். 'ஏன் கூட்டம் போடுகிறீர்கள். விலகுங்கள்' என்று கூட்டத்தைக் கலைத்துக் கொண்டே ஒரு போலீஸ்காரன் அங்கு வந்து சேர்ந்தான். குழந்தை அப்பொழுதும் கத்திக் கொண்டிருந்தது.

'ஸ்டேஷனுக்கு நட' போலீஸ்காரன், ரகுவாவின் கையைப் பிடித்துக் கொண்டே கூறினான்.

'ஐயா, நான் ஒன்றும் தப்பு தண்டா செய்யவில்லை' அவன் கெஞ்சினான்.

'ஒன்றும் தெரியாத குழந்தையடா!' போலீஸ்காரன் அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே கூறினான். ரகுவாவின் ஒரு கை போலீஸ்காரன் வசம் சிக்கிக்கொண்டது. மற்றொரு கையினால் ரிக்ஷாவை இழுத்துக் கொண்டே சென்றான். ஸ்டேஷனுக்குச் சென்று போலீஸ்காரன், எல்லா விஷயங்களையும் ஹெட்கான்ஸ்டபிளிடம் சொன்னான். ரகுவா 'ஏட்டி'ன் காலில் விழுந்து கெஞ்சினான் 'நான் குற்றமற்றவன் ஐயா'.

'பெயர் என்ன?' ஏட் கேட்டான்.

அவன்மௌனமாயிருந்தான்.

'பெயர்...'

'ரகுவா'

'தந்தையின் பெயர்?'

'கோவிந்தா'

'எங்கே வசிக்கிறாய்?'

ஒருகணம் மௌனமாக இருந்தான்.

'ஏன் பேசாமலிருக்கிறாய், சொல், எங்கே வசிக்கிறாய்?'

'சேரியில் ஸார்' அவன் மறுபடியும் 'ஏட்'டின் முன் விம்ம ஆரம்பித்தான்.

ஏட் சும்மா இருந்தான்.

அவன் சொல்லிக் கொண்டே போனான் 'நான் உங்கள் கால்களைப் பிடித்துக் கும்பிடுகிறேன், நான் குற்றமில்லாதவன் ஸார் ......என் குழந்தை என்னை நினைத்துக் கொண்டிருக்கும்... நான் அதற்கு மருந்து வாங்கிச் செல்லாவிடில் அது இறந்து விடும்......'

பேசாமல் இரு, வழக்கு நடக்கும்!

'சரி, நான் இருக்கிறேன், என்னை விட்டு விடுங்கள் சார்!'

ஓர்கணம் மௌனம் நிலவியது.

'வேலையில்லாத் திண்டாட்டத்தினால் தான், நான் ரிக்ஷா இழுத்தேன் ஸார், ஆனால் நிச்சயமாகச் சொல்கிறேன், இனி ரிக்ஷா இழுக்க மாட்டேன், பட்டினியால் இறந்தாலும் சரி.'

'பாசாங்கு செய்யாதே' ஏட் அதட்டினான்.

'என் குழந்தை இறந்துவிடும் சார்.'

'அதற்கு நாங்கள் என்ன செய்வோம், பார்த்து ரிக்ஷா ஓட்டுவதற்கு என்ன?

'என்னைப் போக விடுங்கள் சார்.'

'நல்லது, ஜேபில் என்ன இருக்கிறது? காட்டு!' ஏட் விநயமாகச் சொன்னான்.

ரகுவா தனது ஜேபில் கையை விட்டான். அவனது திறந்த கையில் மஞ்சள்-மஞ்சலாக நான்கு ஓரணாக்கள் காணப்பட்டன.

'நாலு அணாவா!' ஏட் ஆச்சரியப்பட்டான்.

'ஆம், ஸார்.

'பொய் சொல்கிறாய்.'

'இல்லை ஸார்.'

'அந்த ராஸ்கலை முழுதும் சோதனை போடு!' ஏட் ஒரு கான்ஸ்டபிளுக்கு ஜாடை காட்டிச் சொன்னான்.

கான்ஸ்டபிள் நன்றாகப் பார்த்து விட்டான். நான்கு ஓரணாக்களைத் தவிர அவனது ஜேபில் ஒன்றுமேயில்லை. தனது உண்மை ஸ்தாபிக்கப்பட்டதனால் ரகுவாவிற்கு சிறிது தைரியம் பிறந்தது—அவன் கூறினான் நான் சத்தியம் செய்கிறேன் நான் இனி ரிக்ஷாவே இழுக்க மாட்டேன்.

பத்து ரூபாய் கொடுத்து விட்டுப் போ. ஏட் மெதுவாகச் சொன்னான்.

'பத்து ரூபாய்......பத்து ரூபாய் இருந்தால் நான் குழந்தைக்கு வைத்தியம் செய்வேன் ஸார், அவனுக்கு இன்ஜெக்ஷனும் செய்விப்பேன்...அவன் உடல் நிலை தேறிவிடும் ஸார்! இன்று நாலு அணாத்தான்......'

'அப்பொழுது ரிக்ஷாவையே விட்டு விட்டுப் போய்விடு' அருகிலிருந்த ஒரு கான்ஸ்டபிள் பிரச்னையைத் தீர்த்து வைத்தான்.

'ஆம், சரிதான், ரூபாய் கொடுத்து விட்டு, ரிக்ஷாவை எடுத்துச் செல்' ஏட் கான்ஸ்டபிள் மூலம் கிடைத்த சமாதானத்தை ஆதரித்துச் சொன்னார்.

'ரிக்ஷா என்னுடையதில்லை ஸார்.'

'திருடினாயா?'

'வாடகைக்கு'

'எங்களுக்கு ஒன்றும் தெரியாது......எங்களுக்கு......'

ரகுவாவினால் பொறுக்க முடியவில்லை. தடைப்பட்டிருந்த கண்ணீர் வெள்ளம், துக்கத்தின் கரையை உடைத்துக் கொண்டு பெருக்கெடுத்தது. அவன் கதற ஆரம்பித்தான் '...என் குழந்தை......!'

'சும்மா, ஏன் அழுகிறாய்? யாராவது அடித்துக் கொண்டிருக்கிறார்களா என்ன?' ஒரு கான்ஸ்டபிள் கோபித்தான்.

'சொன்னது தெரியலை...போ வெளியே...' ஏட் கத்தினான்.

அவன் யந்திரம் போல் வெளியேறினான், உடைந்த உள்ளத்தோடு தள்ளாடிய நடையுடன், ரிக்ஷாவை அங்கேயே விட்டு விட்டு

வெளியே ஸ்டேஷனின் கேட் அருகில் வந்தவுடன், ஒரு கான்ஸ்டபிள் அவனிடம் மெதுவாகக் கேட்டான். 'வெற்றிலை பாக்கு, பீடி வாங்கணும் அந்த நான்கணாக்களைக் கொடுத்து விட்டுப் போ!......' ★

பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை

கண. முத்தையா

சென்ற வாரம் புதன்கிழமையன்று "அபாயத்தின் எல்லையைத் தாண்டி விட்டோம்; இனிப்பயப்படத் தேவையில்லை" என்று டாக்டர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். ஆனால், வெள்ளியன்று இரவு வந்த தகவல் திடுக்குறச் செய்தது. சனிக்கிழமை அதிகாலையில் அவசர அவசரமாக அடையாறுக்குச் சென்றேன்.

அங்கு நான் கண்டது பேராசிரியரவர்களின் பூத உடலைத் தான். கடந்த ஒன்பது பத்து வருட காலமாகப் பேராசிரியரவர்களுடன் பழகியிருக்கிறேன். அந்த நீண்ட காலத்தில் ஒரு சந்தர்ப்பத்திலாவது அவர்கள் பிறர் மனம் நோகும்படிப் பேசியதையோ, நடந்து கொண்டதையோ நான் கண்டதில்லை. அன்பும், அடக்கமும் நிறைந்த உள்ளம்; அந்த அறிவுக் கடல் எப்போதும் அமைதியுடனிருப்பதையே நான் பார்த்திருக்கிறேன். எந்தச் சூழ்நிலையிலும் அது சீறியெழுந்ததில்லை. தமது கருத்துக்களைப் பலர் எதிர்க்கிறார்கள் என்று தெரிந்துகொண்டே அவற்றை ஆணித்தரமாக வெளியிடும் காலத்தும், அவர்கள் உணர்ச்சி வசப்பட்டுப் பேசியதையோ, தனிப்பட்டவர்கள் யாரையேனும் குறை கூறியதையோ நான் கேட்டதில்லை.

பேராசிரியரவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், எழுத்துக்களையும் படித்துப் பயனடைந்தவர்கள் பலர்; அவர்களது முடிவுகளையும், கருத்துக்களையும் எதிர்த்தவர்களும் பலர்; ஆனால், இந்த அன்பும் அறிவும் நிறைந்த உள்ளத்தை அறிந்து அனுபவித்தவர்கள் சிலரே. அவர்களின் உள்ளப் பண்பையும், அன்பின் செறிவையும் உணராமலேயே அவர்களைப் பலர் குறைகூறியதை நான் கேட்டிருக்கிறேன். பேராசிரியரின் முடிவுகளை எதிர்த்தவர்களெல்லாம் தங்கள் கருத்துகளுக்கு ஏற்ப அவர் முடிவுகள் இல்லையென்பதற்காகவே பெரும்பாலும் எதிர்த்தார்களேயன்றி, அவர் முடிவுகள் தவறானவை என்று நிரூபிக்கும் நோக்கத்தோடல்ல.

திரு. கண. முத்தையா அவர்கள் தமிழ்ப் புத்தகாலயத்தின் அதிபர். அமரர் வையாபுரிப் பிள்ளையவர்களுடன் நெருங்கிப் பழகியவர். அவரது புத்தகங்களைப் பிரசுரித்து வருபவர். மறைந்த தமிழறிஞர் அவர்களின் குண விசேஷங்களை இந்தக் கட்டுரையில் எடுத்துச் சொல்லுகிறார்.

அப்படி எதிர்ப்பவர்களும் கூட பேராசிரியருடன் நேரில் பழகும் போது அவர்களின் அன்பினால் ஆகர்சிக்கப்பட்டிருப்பதைக் கண்டிருக்கிறேன்.

தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டு விருப்பு வெறுப்பின்றி விஞ்ஞான நீதியில் உண்மையான முடிவுகளைக் காண முயன்றவர்களில் முதன்மையானவர் பேராசிரியர். "உண்மையை விட உயர்ந்தது எதுவுமில்லை" யென்பதே பேராசிரியவர்களின் கொள்கை. இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே அவர்கள் ஆராய்ச்சிகள் யாவும் நடைபெற்று வந்தன. எந்த ஒரு முடிவையும் வெளியிடுவதற்கு முன் அதற்கு எத்தனை ஆதாரங்கள் தேடமுடியுமோ, எந்தெந்தக் கோணத்திலிருந்தெல்லாம் அதை ஆராயவேண்டுமோ, அத்தனையும் செய்து முடித்துத் தமக்குத்திருப்தி ஏற்பட்ட பிறகுதான் அந்த முடிவை வெளியிடுவார்கள். உதாரணத்திற்காக, சென்ற ஆண்டில் வேளிவந்த, அவர்களுடைய "கம்பன் காவியம்" நூல் அச்சாகிக்கொண்டிருக்கும்போது ஏற்பட்ட ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். அந்நூலில் "சக அப்தம்" என்ற ஒரு சொல் கம்பனுடைய காலத்தை நிர்ணயிக்கும் பிரச்னையோடு தொடர்பு கொண்டு வருகிறது. இதைத் தெளிவு படுத்துவதற்காகச் 'சகர்'கள் எப்போது இந்தியாவிற்கு வந்து ஒரு ராஜ்யத்தை ஸ்தாபித்தார்கள்? "சக அப்தம்" என்ற வழக்கு எப்போது ஏற்பட்டது? அந்த வழக்கு தமிழ் நாட்டில் எப்போது பரவிற்று? தமிழ் இலக்கியங்களில் எங்கெங்கே காணப்பெறுகிறது என்றெல்லாம் தேடி ஆராய்ந்தார்கள். பல நூல்களை ஆராய்ந்த பிறகும் அவர்களுக்கு ஏற்பட்ட சில சந்தேகங்கள் தெளிவு பெருமையால் அச்சு வேலை மாதக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பெற்றது; ஒரு நாள் காலையில் அவர்களைப் பார்க்கப் போயிருந்தேன். "டுபே என்ற பிரஞ்சுக்காரர் எழுதிய நூல் ஒன்றைப் பார்க்கவேண்டும்; மேலும் 'சகர்'களின் காலம் பற்றிச் சில சந்தேகங்களையும் கேட்க வேண்டும்; ஆகவே ஒரு கார் ஏற்பாடு செய்யுங்கள், ஸ்ரீ வெங்கட்டரமணய்யாவைப் போய்ப் பார்த்துவிட்டு வருவோம்" என்று சொன்னார்கள். இதைக் கேட்டு நான் திகைத்துப்போய் விட்டேன். அப்போது பேராசிரியரவர்களின் உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டுப் படுக்கையிலிருந்தார்கள். அவர்கள் அதிகமாக வேலை செய்வதோ பேசுவதோ கூடக்கூடாது என்று டாக்டர் கண்டிப்பாக உத்திரவு போட்டிருந்தார். இந்த உடல் நிலையில் அவர்கள் நூல்களை ஆராய்வதே அதிகம். ஆனால் பேராசிரியரோ தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள சில மைல் தூரம் பிரயாணம் செய்யவே துணிந்துவிட்டார்கள். அவர்கள் ஆராய்ச்சி உணர்வு உடல் நிலையையே மறந்துவிடும்

படிச் செய்துவிட்டது. என் நிலைமை மிகச் சங்கடமாகிவிட்டது. அவர்களுக்கு இந்த ஆர்வம் ஏற்பட்டுவிட்ட பிறகு, அந்தச் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளாத வரை அவர்களுக்கு மன நிம்மதி ஏற்படாது. ஆனால் மோட்டார்காரில் கூட பிரயாணம் செய்வது அப்போதைய உடல் நிலையில் அபாயகரமானது. ஸ்ரீ வெங்கட்டரமணய்யாவை, அவருடைய புத்தகங்களுடன் அடையாறுக்குக் கூட்டி வருவதாகச் சொல்லி, நிலைமையைச் சமாளித்தேன். நான் போய்க் கூப்பிட்டதும் ஸ்ரீ வெங்கட்டராமணய்யா அவர்களும் உடனே புறப்பட்டு வந்தார்கள். இரண்டு மூன்று நாட்கள் ஸ்ரீ வெங்கட்டரமணய்யா, அடையாறுக்கு வந்து வேண்டிய தகவல்களைக் கொடுத்து விவாதித்த பிறகுதான் சந்தேகங்கள் யாவும் தீர்ந்தன. புத்தக வேலையும் தொடர்ந்து நடந்தது. ஒரு சிறு சந்தேகம் ஏற்பட்டாலும் அதைச் சரியான முறையில் தீர்த்துக் கொள்ளாமல் எந்த வேலையையும் செய்ய மாட்டார்கள். பிறர் என்ன சொல்கிறார்களென்பதைப்பற்றி அவர்கள் அதிகமாகக் கவலைப்படுவதில்லை. ஆனால் தாம் செய்வதைச் சரியாகச் செய்யவேண்டும் என்பதில் தான் அதிகக் கவலை செலுத்துவார்கள்.

குடும்ப வாழ்க்கையைப் பொறுத்தவரை பேராசிரியரவர்கள் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். அவர்களுக்கு நான்கு பெண்களும், மூன்று ஆண் மக்களுமிருக்கிறார்கள். எல்லோருக்கும் திருமணம் ஆகிவிட்டது. பேராசிரியவர்களைப் பொறுத்தவரை மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் யாவற்றையும் சரிவரச் செய்து முடித்து விட்டார்கள். தமிழ் மொழிக்கோ அவர்கள் அதிகமாகச் செய்திருக்கிறார்களென்றாலும், செய்திருப்பதைவிடச் செய்ய வேண்டிப் பாக்கியிருப்பதே மிக அதிகம் என்ற எண்ணம்தான் என் மனத்தில் நிற்கிறது. அவர்கள் தமது காலத்தின் பெரும் பகுதியைக் கம்பனது மாகாவியத்தைப் படிப்பதிலும் ஆராய்வதிலும் கழித்தார்கள். கவிச் சக்கரவர்த்தியின் பெரு நூலுக்கு ஒரு சிறந்த ஆராய்ச்சிப் பதிப்பை வெளியிட வேண்டுமென்று 25 வருட காலம் உழைத்துச் சேகரித்து விஷயங்கள் யாவும் வெளி வராமலேயே முடங்கிக் கிடக்கின்றன. மூன்று மாதங்களுக்கு முன் கூட "பகவான் எனக்கு ஆயுளைக் கொடுக்க வேண்டும்; எப்படியேனும் கம்பனின் இராம காதையை நன்கு வெளியிட்டு விட வேண்டும்" என்று ஆர்வத்தோடு சொன்னார்கள். அவர்களுக்கு ஆர்வம் அதிகமிருந்தது; நமக்கு அதிர்ஷ்டமில்லை

பேராசிரியரவர்கள் எப்பொழுதும் படித்துக் கொண்டும் ஏதேனும் வேலைசெய்து கொண்டுமே இருப்பார்கள். அவர்கள் ஓய்வெடுத்துக் கொள்ள விரும்பியதையே நான் கண்டதில்லை.

சமீப காலத்தில் நோயுற்று மாதக் கணக்கில் படுக்கையிலிருந்த காலத்திலும் எவ்வித வேலையும் செய்யக் கூடாதென டாக்டர்கள் கட்டாயமாகத் தடுத்ததற்காக எழுத்து வேலையைக் குறைத்துக் கொண்டார்களே தவிர! படிப்பதை நிறுத்தவே இல்லை. புத்தகங்களிலே அவர்களுக்கு அபாரப் பிரியம். மாதந்தோறும் ஒரு நல்ல தொகைக்குப் புத்தகங்கள் வாங்குவார்கள். இலக்கிய சம்பந்தமாகவோ சரித்திர சம்பந்தமாகவோ நல்ல நூல்கள் எது வந்திருந்தாலும் உடனே வாங்கி விடுவார்கள். நோய் வாய்ப்பட்டுப் படுக்கையிலிருந்த காலத்திலும், பத்திரிகைகளில் வரும் விளம்பரங்கள், மதிப்புரைகளிலிருந்து புத்தகங்களைக் குறித்து வைத்து, வரவழைத்து விடுவார்கள். அவர்கள் சேகரித்து வைத்துள்ள நூல் நிலையம் தமிழ் நாட்டிலுள்ள சிறந்தநூல் நிலையங்களில் ஒன்றாகவிளங்கும்.

பேராசிரியர்களின் தன்னடக்கம் அதிசயிக்கத் தக்கதொன்று. 'நிறைகுடம் தளும்புவதில்லை' என்று சொல்லுவார்களே அதற்கு உதாரணம் பேராசிரியரவர்கள் தான். யார் எதைச் சொன்னாலும் பொறுமையோடு கேட்பார்கள். சொல்கிற ஆளைப் பொருட்படுத்தாமல், சொல்லப் படுகிற விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கேட்பார்கள். அது பயனற்ற விஷயமாயினும் சொன்னவர் மனம் நோகும்படி நடந்து கொள்ள மாட்டார்கள். தமக்குத் தெரிந்த விஷயங்களை யார் கேட்டாலும் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் விளக்கிச் சொல்வார்கள். தெரியாதனவற்றைச் சிறிதும் தயக்கமின்றித் "தெரியாது" என்று சொல்லிவிடுவார்கள். ஒருநாள் நானும் நண்பர் அழகிரிசாமியும்* பேராசிரியரவர்களைப் பார்க்கப் போயிருந்தோம். நாங்கள் போகும் போது டாக்டர் பட்டம் பெற்ற தமிழறிஞர் ஒருவர் பேராசிரியருடன் பேசிக் கொண்டிருந்தார். நண்பர் அழகிரிசாமி 19-ம் நூற்றுண்டில் தோன்றிய ஏதோ ஒரு சிறிய பிரபந்தத்தைப் பற்றிப் பேராசிரியரிடம் ஏதோ சந்தேகம் கேட்டார். உடனே பேராசிரியரவர்கள் "நான் அதைப் பார்த்ததில்லை" என்று பதில் சொன்னார்கள். எங்களைப் பொறுத்த வரை விஷயம் அத்துடன் முடிந்துவிட்டது. ஆனால் அந்த டாக்டர் இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போய் விட்டார். திரும்பி வரும்போது அந்த டாக்டர் கேட்டார் "எந்தத் தமிழ்ப் பண்டிதரையா இப்படித் தெரியாது என்று நேரடியாகப் பதில் சொல்வார்?" என்று.

பேராசிரியரவர்களுடன் பழகிய யாரும் அவர்களுடைய பண்பாடும், அன்பும் நிறைந்த உள்ளத்தையும் பெருந்தன்மையுடனும், மிகக் குறிப்பிடத் தக்க தன்னடக்கத்துடனும் அவர்கள் நடந்து கொள்வதையும் மறக்கவே முடியாது. ★

---

* மலேயா 'தமிழ் நேசன்' பத்திரிகையின் ஆசிரியர்.

குட்டிக்கதைகள்

ஆத்திரக்காரன்

ஒரு திராட்சைத் தோட்டத்தில் நரிகள் வந்து நிர்த்துளி செய்து வந்தன. சொந்தக்காரனுக்கு வயிறு பற்றி எரிந்தது. இந்தத் தொல்லையைப் போக்க வழி என்னவென்று யோசித்து யோசித்து அவனுக்கு மனம் புண்ணுயிற்று. அச்சமயத்தில் அவன் வைத்திருந்த பொறியில் ஒரு நரி அகப்பட்டது. கோபமாக இருந்த தோட்டக்காரன், இந்த நரியைக் கொண்டு மற்ற நரிகளுக்குப் பாடம் கற்பிக்க எண்ணினுன். உடனே நரியின் வாலில் எண்ணெய்த் துணியைச் சுற்றினுன். அதில் தீயை வைத்து நரியை விட்டு விட்டான். தீ பற்றி எரிந்தது. நரி ஊளையிட்டுக் கொண்டு ஓடியது. அதன் வேதனையைக் கண்டு தோட்டக்காரன் சந்தோஷம் கொண்டான். ஓடிய நரி தோட்டக்காரனின் கோதுமை வயலுக்குள் புகுந்தது. கோதுமைக் கதிர்கள் விளைந்து அறுவடைக்குத் தயாராக இருந்தன. நரி, வாலில் நெருப்போடு வயலுக்குள் ஓடியதும், கதிர்கள் தீப்பிடித்துக் கொண்டன. அந்நேரத்தில் காற்றும் பலமாக அடித்தது. வயல் பூராவும் தீ பரவி கதிர்கள் எல்லாம் எரிந்து சாம்பலாயின. இதைப் பார்த்தான் தோட்டக்காரன்; அப்படியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டான். "அறிவீனமாக நடந்து கொண்டேனே! நரியின் வாலுக்கு வைத்த தீ, என் வயலை அல்லவா எரித்து நாசமாக்கிவிட்டது. எனக்கு இந்தக் குரூரபுத்தி ஆகாது. ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்பது எனக்கே பொருந்தும்" என்று பிரலாபித்தான்.

★

ஊசிக்கு எதிர் ஊசி

சிங்கராஜனுக்கு வயதாகி விட்டது. அதனுல் வெளியே சென்று இரைதேட முடியவில்லை. அது ஒரு யுக்தி செய்தது. சிங்கம் நோயால் படுத்திருக்கிறதென்றும் மிருகங்கள் அதன் குகைக்கு வந்து மரியாதை செலுத்தலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. பல பிராணிகள் இதை உண்மை என்று நம்பி குகைக்குச் சென்றன. குகைக்கு வந்ததும் அந்தப் பொல்லாத கிழட்டுச்சிங்கம், அவற்றின்மேல் பாய்ந்து அடித்துச் சாவகாசமாய்த் தின்று வந்தது. நரி மட்டும் குகைக்குப் பக்கத்திலேயே போகவில்லை. இதைக் கவ

ஈசாப்

ளித்த சிங்கம், குள்ள நரியை அழைத்து நரியிடம் சென்று காரணம் கேட்டு வரும்படி சொல்லியனுப்பியது. சிங்கத்தை இப்படி அவமானம் செய்யலாமா என்று குள்ள நரி, நரியைக் கேட்டது. இதைக் கேட்ட நரி சொன்னது: "எஜமானனுக்கு என்னுடைய தாழ்மையான வணக்கத்தைப் போய்ச் சொல்லு. குகைக்கு வர வேண்டுமென்று பல தடவைகள் நான் நினைத்ததுண்டு. ஒரு தடவை நான் குகை வாசல் வரைவந்தேன். அங்கே பார்த்த போது குகைக்குள் பிராணிகள் போனதடம் மட்டும் தெரிந்தன. வெளியே திரும்பி வந்த தடங்களே காணவில்லை. ஆகவே என்னுடைய உடல்நிலை அங்கே வர இடம் கொடுக்கவில்லை."

★

சொல்லும் செயலும்

தாய் நண்டு தன் மகனைப் பார்த்து "நீ என்ன இப்படி அழகில்லாமல் பக்கவாட்டில் நடக்கிறாய்? ஏன் மற்றவர்களைப் போல நேராகப் போகக் கூடாது?" என்று கேட்டது.

இதைக்கேட்ட மகன், "ஏம்மா, நீ எப்படி நடக்கிறாயோ அது மாதிரிதானே நானும் நடக்கிறேன். வேறு மாதிரியாக நடக்க வேண்டுமானால் நீயே நடந்து காட்டு. அப்படியே நானும் நடக்கிறேன்" என்று பதில் கொடுத்தது.

★

வாய் அனுதாபம்

ஒரு நரி கிணற்றுக்குள் தவறி விழுந்து விட்டது. மேலே வர முடியவில்லை. தண்ணீருக்குள் மூழ்கி விடாமல் இருப்பதற்காக முகத்தைத் தண்ணீருக்கு மேலே நீட்டிக் கொண்டிருக்கப் பிரயாசைப்பட்டது. இந்தச் சமயம் அந்தப் பக்கமாக ஒரு ஓநாய் வந்தது. கிணற்றுக்குள் பார்த்தது. சுவரைப் பற்றிக் கொண்டு முகத்தை மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு இருந்த நரி தென்பட்டது. "நண்பர் நரியாரே, உமக்கா இந்தக் கதி வரவேண்டும்? தண்ணீரில் ரொம்பக் குளிராக இருக்குமே! ஐயோ நீர் எப்படி விழுந்தீர்? எத்தனை மணிக்கு விழுந்தீர்? எல்லாவற்றையும் கொஞ்சம் விவரமாகச் சொல்லுமே! அவற்றைக் கேட்டாவது என் மனம் கொஞ்சம் நிம்மதியடையட்டும்! தயவு செய்து உடனே சொல்லுங்கள் நரியாரே!" என்று கேட்டது.

இதைக் கேட்ட நரி சொன்னது: "நான் உயிருக்குத் திண்டாடும் போது எப்படி விழுந்தேன், எத்தனை மணிக்கு விழுந்தேன் என்ற விவரங்களைச் சொல்லும்படி கேட்கிறீரே! நீர் மேலே இருந்து கண்ணீர் விடுவதைவிட ஒரு கயிற்றைக் கிணற்றுக்குள் தொங்கவிட்டால் அதுதான் எனக்குப் பெரிய உபகாரமாக இருக்கும். நான் மேலே வந்தபிறகு எல்லா விவரங்களையும் சொல்லுகிறேன்."

★

கெடுவான் கேடுநினைப்பான்

காட்டு ராஜா சிங்கத்துக்கு நோய் கண்டது. நீண்ட நாட்களாகப் படுத்த படுக்கையில் கிடந்தது. இருந்தாலும் கோபம் மட்டும் குறையவில்லை. நரி அதன் கண்களில் படாமல் நடமாடி வந்தது. என்றாலும், சிங்கத்தின் குகையில் நடப்பதை மறைவாக இருந்து கவனித்து வந்தது. ஓநாய்க்கும் நரிக்கும் என்றுமே ஆகாது, ஒருநாள் தன்னைப் பற்றிச் சிங்கத்திடம் ஓநாய் பேசிக்கொண்டிருந்ததை ஒட்டுக் கேட்டது. "உங்கள் சமூகத்தை வந்து பார்க்காமல் இந்த நரி ஏமாற்றி வருகிறது" என்று ஓநாய் சொல்லிற்று. சிங்கம் இதைக் கேட்டு உறுமியது. "என்ன காரணம்?" என்று கேட்டது. "தங்கள் சமூகத்துக்கு விரோதமாக அது சதி செய்து வருகிறது" என்று ஓநாய் சொல்லிற்று.

"அப்படியா சமாச்சாரம்? இருக்கட்டும்; இந்தக் குள்ள நரியை அனுப்பி அதைக் கூட்டி வரச் சொல்லு" என்று உத்திர விட்டது சிங்கம்.

நரியைக் குள்ள நரி கூப்பிட்டு வந்தது. அதைப் பார்த்ததும் சிங்கம், "நமது சபைக்கு இது வரை நீ ஏன் வராமல் இருந்தாய்? சொல்லு காரணம்" என்று கேட்டது.

நரி, "ராஜாவே, மன்னிக்க வேண்டும், உங்களை அவமரியாதைசெய்வதற்காக நான்வராமல் இருக்கவில்லை. உங்கள் நோய் தீர வேண்டும் என்பதற்காகப் பல நாடுகளிலும் உள்ள வைத்தியர்களைப் பார்த்து வந்தேன்.

சிங்கம் : அப்படியா? மிக்க மகிழ்ச்சி. வைத்தியர்கள் என்ன சொல்லுகிறார்கள்?"

ஓநாயை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டே, "மகாராஜா, உங்கள் நோய் தீருவதற்கு ஒரே ஒரு வைத்தியம் தான் இருக்கிறது. எல்லா வைத்தியர்களும் ஒரேமாதிரி சொல்லுகிறார்கள். அதாவது புத்தம் புதிதாக உரித்த ஓநாய்த் தோல் ஒன்றை உங்கள் மேல் போர்த்த வேண்டுமாம்" என்று நரி பதில் அளித்தது.

இதைக் கேட்டதுதான் தாமதம், சிங்கம் பக்கத்திலிருந்த ஓநாயின் மேல் பாய்ந்து அதைக் கொன்றது.



நடிகனின் தகுதிகள்

◆◆

வெ. சாமிநாத சர்மா

◆◆

காவியம் புனைவோன், ஓவியம் வரைவோன் நாடகம் நடிப்போன் ஆகிய மூவரும் கலையுலகத்தின் திரிகர்த்தர்கள். இவருள் முதலிருவரும் தங்களை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதில்லை. தங்களுடைய சிருஷ்டிகளை மட்டிலும் வெளிப்படுத்தினால் போதும்; பொருளோ புகழோ இவர்களுக்குக் கிடைத்து விடுகிறது. நடிகன் அப்படியல்ல. அவனுடைய நிலைமை வேறு; அவன் தன்னையே வெளிப்படுத்திக்கொள்ள வேண்டியவனாயிருக்கிறான். அவன் வேறு, அவன் சிருஷ்டி வேறாக இருப்பதில்லை. அவனே சிருஷ்டியாகக் காட்சியளிக்க வேண்டியவனாயிருக்கிறான்.

கவிஞனுடையவோ, ஓவியனுடையவோ உடலமைப்பு, முகத்தோற்றம் நடை, குரல் இவைகளை யெல்லாம் நாம் பார்ப்பதுமில்லை. கேட்பதுமில்லை. இவைகளைப் பற்றி நாம் கவனம் செலுத்துவதுமில்லை. ஆனால் ஒரு நடிகன் விஷயத்தில் மேற்சொன்ன உடலமைப்பு, முகத்தோற்றம், நடை, குரல் எல்லாம் முக்கியமாயிருக்கின்றன. அவன் எந்தப் பாத்திரமாக மேடைமீது தோன்றியபோதிலும் அந்தப் பாத்திரத்தைத் திறம்பட நடிப்பதற்கு இவை யாவும் (உடலமைப்பு முதலிய யாவும்) முக்கிய சாதனங்களாய் இருக்கின்றன. இவையின்றேல் நடிகனில்லை.

கவிதையிலும், ஓவியத்திலும் அவைகளைச் சிருஷ்டித்தவர்களின் அகத்தை மட்டுமே நாம் பார்க்கிறோம். ஆனால் நடிகனுடைய நடிப்பில், அவனுடைய முகத்தையும் பார்க்கிறோம். அவனுடைய முகத்தைப் பார்த்துத் தான் அவனுடைய அகத்தைத்

திரு. சாமிநாத சர்மா அவர்கள் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர். மிகக் கடினமான அரசியல், பொருளாதாரத் தத்துவங்களையும் எல்லோருக்கும் விளங்கும் நடையில் தமிழில் எழுதும் ஆற்றல் மிக்கவர். இவரது 'சோவியத் ருஷ்யா', 'புதிய சீனா' முதலிய புத்தகங்களையும், 'அரசியல்', 'சமுதாய ஒப்பந்தம்' என்ற இவரது மொழிபெயர்ப்பு நூல்களையும் படிக்காதவர்கள் இருக்க முடியாது.

இந்தக் கட்டுரையில் நடிகருக்கு இருக்கவேண்டிய குணங்களை விளக்குகிறார். தென் இந்திய நடிகர் சங்கத்தின் மாத இதழ் 'நடிகன் குரல்' பிப்ரவரி இதழில் வெளிவந்தது இந்தக் கட்டுரை.

தெரிந்து கொள்ள வேண்டிய வர்களாகவும் இருக்கிறோம்.

கவிஞனும், ஓவியனும் தங்கள் வாழ்க்கையில் பெரும் பகுதியை லட்சிய உலகத்திலேயே கழிக்கிறார்கள். அப்படிக் கழிப்பது தான் அவர்களுக்குக் கௌரவம். நடிகனோ பிரத்தியட்ச உலகிலும் வாழ வேண்டியவனாயிருக்கிறான். அந்தப் பிரத்தியட்ச உலகத்தை அணைத்துக் கொண்டு போகா விட்டால் அவனுக்குக் கௌரவக் குறைவு மட்டுமல்ல, பொருளோ புகழோ எதுவும் கிடைக்காது. லட்சிய வாழ்க்கை இன்னது என்று அவன் நடித்துக் காட்ட வேண்டியவன்; அதற்காகப் பிரத்தியட்ச உலகில் நடந்து காட்ட வேண்டியவன். எவ்வளவு கடினமான சாதனை ஒரு நடிகனுடையது? அப்படியானால் அவன் எப்படி யிருத்தல் வேண்டும்?

ஒரு நடிகன் சமுதாயத்தில் தனக்கு ஒரு முக்கியமான ஸ்தானம் உண்டு என்பதை உணர்தல் வேண்டும். தன்மதிப்பில்லாதவன் பிறரால் மதிக்கப்பட மாட்டான். நாடகத் தொழிலை "குறைவற்ற தொழில்" என்று போற்றி வளர்த்திருக்கின்றனர் நமது முன்னோர் என்பதை ஒவ்வொரு நடிகனும் தெரிந்து கொள்ளுதல் அவசியம், ஒரு நடிகன், தனது நாட்டின் பழமையைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடியாகவும், நிகழ் காலத்தின் நிறை குறைகளை எடுத்துச் சொல்லும் ஒலிபரப்பியாகவும், வருங்கால நல்வாழ்விற்கு வழி காட்டும் விளக்காகவும் இருத்தல் வேண்டும். இம் மூன்று காலங்களையும் தனது நடிப்பிலே கொண்டுவந்து காட்டும் ஆற்றலுடையவனாயிருக்க வேண்டும்.

ஒரு நடிகன், தனது நடிப்பின் மூலம் சமுதாயத்தின் மீது படிந்துள்ள அழுக்குகளை அப்புறப் படுத்தலாம். ஆனால் அதை நாசுக்காகச் செய்ய வேண்டும். சமுதாயத்தைக் சுத்தப்படுத்த வேண்டுமென்பது தான் அவன் நோக்கமாயிருக்க வேண்டுமே தவிர, அழுக்குகளைக் கழுவிக் காட்டுவதே அவன் நோக்கமாக இருக்கக் கூடாது. அப்படிக் கழுவிக் காட்டுவதில் திருப்தியோ மகிழ்ச்சியோ அடையக் கூடாது. கழுவிக் காட்டுவதென்பது அழிவு வேலையின் பாற்படும். நடிகன் ஆக்கத்திற்காக இருக்கிறானே தவிர அழிவிற்காக அல்ல. ஆக்கத்திற்காக அழிவைச் செய்யலாமே தவிர அழிவுக்காக அழிவைச் செய்யக் கூடாது.

எனவே, ஒரு நடிகன் சமுதாயத்தினருடைய மதிப்பையும் மரியாதையையும் பெறவேண்டுமானால், சமுதாயத்திற்குத் தன்னாலியன்ற வரை தொண்டு செய்து கொண்டிருக்க வேண்டுமானால், அவன் தன்னைப் பல விதத்திலும் தகுதிப்படுத்திக் கொள்ளுதல் அவசியமில்லையா? எப்படி, எப்படி?

ஒரு நடிகன் நூலறிவு மிகப் படைத்திருத்தல் வேண்டும். தனது நாட்டின் புராதனக் கிரந்

தங்களில் நல்ல பரிச்சயமும், அவைகளிலிருந்து தக்க சந்தர்ப்பங்களில் மேற்கோள்கள் எடுத்துக் காட்டக் கூடிய ஞாபக சக்தியும் பெற்றிருத்தல் வேண்டும். தன் சமகாலத்தில் என்னென்ன புதிய நூல்கள் வெளியாயிருக்கின்றன என்பதைத் தேடிப் பிடித்து அவற்றின் நல்ல நூல்கள் இன்னவை என்று தேர்ந்தெடுத்து அவற்றைப் படித்து, தன் அறிவை அவ்வப்பொழுது பெருகிட்டுக் கொண்டுவரவேண்டும்.

நல்ல நூல்களைத் தேர்ந்தெடுப்பதென்பதே ஒரு சிரம சாத்தியமான காரியமல்லவா? அதற்கும் ஒரு தகுதி வேண்டுமல்லவா? இந்தத் தகுதியை அவன் ஆரம்பத்திலேயே சுலபமாகப் பெற்றுக்கொண்டு விட வேண்டும். உலகத்தில் நல்லதுக்காகவே நாம் பிறந்திருக்கின்றோமென்ற எண்ணம் யாருடைய நெஞ்சத்தில் நிலைத்திருக்கிறதோ, "நெஞ்சத்து நல்லம் யாம்" என்ற நினைவு யாருடைய அன்றாட வாழ்வில் பரவி இருக்கிறதோ அவருக்கு, நூல்களில் நல்ல நூல்களிவை என்று தெரிந்தெடுத்தலில் கஷ்டமாயிராது. இந்த எண்ணம், இந்த நினைவு ஒவ்வொரு நடிகனுக்கும் இருத்தல் வேண்டும்;

புராதனக் கிரந்தங்களில் நல்ல பரிச்சயம் இருக்க வேண்டுமென்று மேலே சொன்னேமல்லவா? இவற்றுள் சிறப்பாக, தனது நாட்டின் சரித்திரத்தில் அதிகப் பரிச்சயம் இருக்க வேண்டுவது ஒரு நடிகனுக்கு மிகவும் அவசியம். முன்னோர்கள் அன்றாட வாழ்க்கையை எப்படி நடத்தி வந்தார்கள். அவர்கள் வாழ்க்கையில் கண்ட உண்மைகள் என்ன, அவர்களுடைய நடை உடை பாவனைகளெல்லாம் எவ்வாறு அமைந்திருக்கின்றன, அவர்கள் காலத்தில் சமுதாயம் எப்படி இயங்கிக் கொண்டு வந்தது, அந்த இயக்கத்தில் எப்பொழுதேனும் கரகரப்பு ஏற்பட்டிருக்குமானால் அதற்கு என்னென்ன காரணங்கள், அந்தக் கரகரப்பு எப்படி நிறுத்தப்பட்டது - முதலியவைகளை ஒரு நடிகன் நன்கு தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் அவன், அவைகளையெல்லாம் தனது நடிப்பில் பிரதிபலித்துக் காட்ட முடியும். ராமனை நடிக்கிறவன் ராமாயணத்தை நன்கு படித்துத் தெளிந்திருக்க வேண்டுமென்பதை நாம் சொல்லத் தேவையில்லையல்லவா?

நடிகன் சரித்திரத்தைத் தவிர, நாடக சம்பந்தமான நூல்களையும் அதிகம் பயில வேண்டும், அந்த நூல்கள் எந்த மொழியில் வெளிவந்திருக்குமானாலுஞ் சரி, அவற்றை வாங்கியோ வாங்கச் செய்தோ படித்தறிய வேண்டும். தனக்குத் தெரியாத மொழியில் வெளிவந்திருக்கும் நூல்களை அம்மொழி தெரிந்தவர்களைக் கொண்டு படிக்கச் செய்தோ அம்மொழி தெரிந்தவர்களிடமிருந்து கேட்டோ அவற்றின் சாரத்தைக் கிரகித்துக் கொள்ள வேண்டும்.

சாதாரணமாக ஒரு நடிக னுக்கு, தனது தாய்மொழியைத் தவிர, இரண்டு மூன்று மொழி களேனும் நன்கு தெரிந்திருக்க வேண்டும். அப்பொழுது தான் அவனுக்கு அந்த மொழிகள் மூலம் நாடகக் கலேயானது எங் ஙனம் வளர்ச்சியடைகிறதென் பதை ஒருவாறு அறிந்து கொள் ளுதல் இயலும்.

நாடகக் கலேயைப் பற்றின நூல்களேப் பயின்றிருந்தால் மட்டும் போதாது. அந்தக் கலேயில் அனுபவ அறிவும் பெற் றிருத்தல் வேண்டும் ஒரு நடி கன். உதாரணமாக, அற்புதம், ரௌத்திரம், கருணே, குற்சை, சாந்தம், சிங்காரம், பயம், பெரு நகை, வீரம் என்ற ஒன்பது சுவைகளின் பெயர்களே மட்டும் தெரிந்து கொண்டிருந்தால் போதுமா? அவற்றை உரிய இடங்களில் வெளிப்படுத்தத் தெரிந்து கொண்டிருக்க வேண் டும். அப்படி வெளிப்படுத்து வதை, பார்ப்பவர்கள் அனுபவிக் கக் கூடிய விதமாக வெளிப் படுத்த வேண்டும். அதாவது பார்க்கிறவர்கள், உள்ளத்தில் உணர்ச்சி உண்டாகுமாறு ஒரு வன் நடிக்க வேண்டும். அதில் தான் ஒரு நடிகனுடைய சிறப்பு இருக்கிறது.

ஒரு நடிகனுக்கு எல்லாச் சுவைகளேயும் அபிநயித்துக் காட்டக் கூடிய ஆற்றல் இராது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சுவையில் திறமை இருக்கும். இது சகஜம். எந்தச் சுவை யைத் தன்னல் அபிநயித்துக் காட்ட முடியுமென்று ஒருவ னுக்கு நம்பிக்கை இருக்கிறதோ அந்தச் சுவை பற்றின சகல அம்சங்களேயும் அவன் நன்கு தெரிந்திருக்க வேண்டும், அதனே அடிக்கடி அபிநயித்துப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தன்னல் முடிந்த சுவையைப் பற்றி மட்டும் தெரிந்துகொண்டு, மற்றச் சுவைகளே மறந்துவிட லாம்; அதாவது தெரிந்துக் கொள்ளாமலேயே இருந்துவிட லாம் என்பது அர்த்தமல்ல. மற்ற சுவைகளே அவனல் அபி நயித்துக் காட்ட முடியாவிட்டா லும் அவைகளே அபிநயித்துக் காட்டுகிறவர்களேப் பாராட் டவோ அவர்களுடைய அபி நயத்தில் குறைகள் காணப் படின் அவற்றினே எடுத்துச் சொல்லவோ அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

அறையிலாடிய பின்னரே அம்பலத்திலாடவேண்டும் என்று சொல்வார்கள். இது யாருக்குப் பொருந்துகிறதோ இல்லேயோ, ஒரு நடிகனுக்கு முற்றிலும் பொருந்தும். பகி ரங்கமாக ஒரு நாடகத்தை நடத்துவதற்கு முந்தி எப்படி ஒத்திகைகள் பல நடைபெறு கின்றனவோ, அதுபோல தனிப் பட்ட ஒரு நடிகன், தன்னுடைய குறிப்பிட்ட நடிப்புத் திறனேப் பலர் முன்னிலேயில் காட்ட முற் படுவதற்கு முந்தி, தனியாக இருந்து அதில் அபிநயித்து அபிநயித்துப் பயிற்சி பெற வேண்டும். அப்படிப் பயிற்சி பெறுகிறபோது எதிரில் ஒரு

நிலைக் கண்ணாடியை வைத்துக் கொள்ளுதல் நல்லது. அப்பொழுது தான் தன் அங்க அவயவ அசைவுகள், முகத்திலே ஏற்படும் மாறுதல்கள் ஆகிய பலவும் பார்ப்பவர்களுக்கு அருவருப்பை உண்டாக்காமல் இருக்குமா என்று பார்த்துக் கொள்ளுதல் முடியும். பிறர் தன்னைப் பார்த்துச் சிரிப்பதற்கு முந்தி, தன்னைத்தானே பார்த்துச் சீர்திருத்திக்கொள்ள நிலைக் கண்ணாடி பெரிய உதவி செய்கிறது.

ஒரு நடிகன், நூலறிவு பெற்றிருப்பதோடு உலக இயல்பையும் நன்கு அறிந்திருக்க வேண்டும். உலகத்தோடு ஒட்டி வாழ்ந்து பலவும் கற்கவேண்டும், அப்பொழுதுதான், ஏட்டிலே கண்டதற்கும், நாட்டிலே காண்பதற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை அவனால் நன்கு அறிந்துகொள்ள இயலும். அறிந்துகொண்டால் தானே அந்த ஒற்றுமை வேற்றுமைகளைத் தன் நடிப்பிலே கொண்டு வந்து காட்ட முடியும்? ஒரு நடிகன், அரசனாகவும் நடிக்கவேண்டியிருக்கும்; ஆண்டியாகவும் நடிக்கவேண்டியிருக்கும். அப்படியானால், அவன் இரு தரத்தினருடைய வாழ்க்கை விபரங்கள், பேச்சு வார்த்தைகள் முதலிய பலவற்றையும் நன்கு தெரிந்துகொண்டிருக்க வேண்டு மில்லையா?

ஒரு நடிகனுக்கு மூன்றுவித சக்திகள் இருக்கவேண்டியது முக்கியம். முதலாவது, ஒன்றைக் கண்டாலும் சரி, கேட்டாலும் சரி அதை உடனே கிரகித்துக்கொள்ளவேண்டும்; இரண்டாவது, கிரகித்துக்கொண்டதை நன்றாக மனதில் பதிய வைத்துக்கொள்ளவேண்டும்; மூன்றாவது, மனதில் பதிய வைத்துக் கொண்டதை தக்க சமயத்தில் எடுத்துச்சொல்லும் தைரியமும் தன்னம்பிக்கையும் வேண்டும்.

இடப் பொருத்தம், காலப் பொருத்தம், வேஷப் பொருத்தம், மேடைமீதிருக்கும் மற்ற நடிகர்களுடைய நிலைமை இவையனைத்தையும் அனுசரித்து, அவன் பேசவும் நடந்துகொள்ளவும் தெரிந்துகொண்டிருக்க வேண்டும். இதற்கு நல்ல கற்பனா சக்தி வேண்டுமல்லவா?

இங்ஙனம் பலவிதங்களிலும் தகுதிப்படுத்திக் கொள்கிறவன் சிறந்த நடிகனாகப் பிரகாசிக்க முடியும்; அவனால்தான் நாடகக் கலையும் வளரும்.



ஹார்வியும் இரத்த ஓட்டமும்

★

அ. நடராஜன்

★

மனிதன் தோன்றியதிலிருந்து தன்னைச் சுற்றியுள்ள பொருள்களைப் பற்றியும் உயிர் வகைகளைக் குறித்தும் அறிந்து கொள்ள முயன்று வந்திருக்கிறான். அவற்றின் இயல்புகளை விளக்கப் பல கருத்துக்களையும் கண்டுபிடித்திருக்கிறான். நாட்கள் செல்லச் செல்ல அறிவாராய்ச்சி முறை சிறப்படைந்தது; புதிய செய்திகள் கிடைத்தன. அதனால் தவறான கருத்துக்கள் கைவிடப்பட்டன; உண்மையான விளக்கங்கள் கண்டுபிடிப்பது சாத்தியமாயிற்று. 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' அறிவு வளர்ச்சியின் ஆரோக்கியத்திற்கான அறிகுறிகள் என்று சொல்லலாம்.

மனித உடலின் அமைப்பைப் பற்றியும் அது இயங்கும் முறையைக் குறித்தும் பண்டைக் காலத்திலேயே சில கருத்துக்கள் தெரிந்திருந்தன. ஆயினும், அவை பெரும்பாலும் தவறாக இருந்தன. அதற்குக் காரணம், பரிசோதனை முறை என்பதற்குப் பண்டைய அறிஞர்கள் சிறப்பிடம் அளிக்காததுதான். உடலில் இரத்த ஓட்டம் எவ்வாறு நிகழ்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டிய பெருமை வில்லியம் ஹார்வி என்பவரைச் சேர்ந்தது.

வில்லிய ஹார்வி இங்கிலாந்தில் ஃபோக்ஸ்டோன் என்னும் இடத்தில் 1578 ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் பிறந்தது பணக்கார, கௌரவமான குடும்பத்தில். கேம்பரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தனது பத்தொன்பதாம் வயதிலேயே பட்டம் பெற்றார். வைத்தியப் பயிற்சியிலே அவர் மனம் நாட்டம் கொண்டது. அந்தக் காலத்தில் வைத்தியப் பயிற்சிக்கு மிகச் சிறந்த இடம் இத்தாலியில் உள்ள பாடுவா பல்கலைக் கழகம். அறிவில் சிறந்த ஃபாப்ரிகஸ் என்னும் பெரியவரிடம் பாடம் கேட்கும் பெரும்பேறு ஹார்விக்குக் கிட்டியது. ஹார்வி சென்ற சமயம், ஃபாப்ரிகஸ் கெட்ட இரத்தத்தைச் சுமந்து செல்லும் சிரைகளில் இருக்கும் வால்வுகளைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார். (வால்வுகள் எனப்படுபவை ஒரு புறமே திறக்கும் கதவுகளைப்

போன்றவை; அவை மூலமாக இரத்தம் ஒரு திசையில் தான் செல்லமுடியும்) இரத்த மண்டலத்தைப்பற்றிய முதல் அறிமுகம் ஹார்விக்கு அதுதான்! கெட்டிக்காரர், சுயமாகவே சிந்தித்து முடிவுக்கு வரும் திறமை உள்ளவர் என்று படிக்கும் போதே புகழ் அடைந்தார்; 1602-ல் பாடுவாவில் படிப்பை முடித்துக்கொண்டு ஹார்வி இங்கிலாந்து திரும்பினர். வைத்தியப் பரீட்சை எழுதிப்பட்டமும் பெற்றார். வைத்தியத் தொழிலில் மிக விரைவிலேயே நல்ல புகழும் செல்வாக்கும் ஏற்பட்டன. 1604-ல் மனத்திற்கு உகந்த மாதை மணம் செய்து கொண்டு இல்லற வாழ்க்கையைத் துவக்கினர். முதலாவது ஜேம்ஸ், முதலாவது சார்லஸ் ஆகிய மன்னர்களின் நன்மதிப்புக்குப் பாத்திரமாயிருந்தார் ஹார்வி. ஒரு சமயம் முதலாவது சார்ல்ஸுடன் போர்க்களத்துக்குப் போனபோது தன் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளும்படி அரசன் அவரைக் கேட்டுக் கொண்டான். சண்டை மும்முரமாக நடக்கும்போது ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு புதரின் கீழ் உட்கார்ந்து வாசித்தாராம் ஹார்வி! சுமார் 50 வருடங்கள் மருத்துவத் துறையிலும் அறிவாராய்ச்சியிலும் அரிய தொண்டு ஆற்றிவிட்டு 1657-ல் மரணம் அடைந்தார் அவர். குழந்தை இல்லாததனல் தனது ஆஸ்தி முழுவதையும் அறிவு வளர்ச்சிக்காகவே செலவிடுவதற்கு எழுதிவைத்து விட்டார் ஹார்வி!

தனது கருத்துக்களை எல்லோருக்கும் புரியும்படி தெளிவாக எடுத்துச் சொல்லும் ஆற்றல் படைத்தவர் ஹார்வி. இரத்த ஓட்டத்தைப் பற்றிய அவருடைய கருத்துக்களை முதலில் எதிர்த்தவர்கள் கூட அவருடைய பேச்சைச் கேட்ட பிறகு ஏற்றுக்கொண்டார்களாம்! அவ்வளவு தெளிவாகவும் அன்புடனும் விஷயங்களை எடுத்துச் சொல்வாராம் அவர். இரத்தம் ஓட்டம் பற்றிய புது விளக்கம், கோழிமுட்டையில் கருவின் வளர்ச்சி ஆகியவை, உயிரியல் நூல்களுக்கு அவர் அளித்த விசேஷக் கருத்துக்கள் எனச் சொல்லலாம். உடலின் உறுப்புக்கள், அலுவல்கள், கரு வளர்ச்சி முதலிய பல விஷயங்களைப்பற்றி ஹார்வி எழுதியிருக்கிறர். ஆனல், முதலாவது சார்ல்ஸ் மன்னனுடன் போர்க்களங்களுக்குச் சென்றதால் பல அரிய கையெழுத்துப் பிரதிகள் தொலைந்துபோயின என்று சொல்லப்படுகிறது. 'இருதயமும் இரத்த ஓட்டமும், என்பது அவருடைய நூல்களில் முக்கியமானதாகும். 1615 ஆம் ஆண்டிலிருந்தே இரத்த ஓட்டத்தைப் பற்றி தனக்கு இருந்த கருத்துக்களை எடுத்துச் சொல்லத் தொடங்கினர் ஹார்வி; ஆனல், 1628-ல் தான் முதன் முதலாக அந்த நூலை வெளியிட்டார். அது வெளியிடப்பட்டதும் அவருடைய வைத்தியத் தொழில்

மந்தம் அடையத் தொடங்கிய தாம்! தவருன பழைய கருத்துக்களை ஒதுக்கிவிட்டார் அல்லவா, அதற்குத் தண்டனை போலும்!

இரத்த ஓட்டத்தைப்பற்றி அவருக்குமுன் இருந்த கொள்கைகள் பெரும்பாலும் கி. பி. இரண்டாவது நூற்றுண்டிலிருந்த காலன் என்பவருடைய கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டவையே. காலனின் கொள்கைகளைச் சிறிது தெரிந்து கொள்வது நல்லது. "நாம் சாப்பிடும் உணவு குடல்களில் பால் போன்ற திரவமாக மாற்றப்படுகிறது. அங்கிருந்து கல்லீரலை அடைந்து அங்கே சிரை - இரத்தமாக மீண்டும் மாற்றப்படுகிறது. அந்த இரத்தம் இதயத்தின் வலது பக்கம் கீழறைக்கு வருகிறது. பெரும் பகுதி அங்கேயே தங்கி அசுத்தங்களை நுரையீரலுக்கு அனுப்பிவிடுகிறது. சுத்தம் செய்யப்பட்ட இரத்தம் மீண்டும் சிரைகளுக்கே சென்று விடுகிறது. எஞ்சியுள்ள சிறு பகுதி இருதய அறைகளுக்கு இடையில் உள்ள ஜவ்வு மூலமாக இடது பக்கம் கீழறைக்குக் கசிந்து வருகிறது. காற்றுக் குழாய் வழியாக அங்கு வந்திருக்கும் வாயுவுடன் சேர்ந்து சுத்தமாக ஆகிறது. இந்த இரத்தமே உடலின் பல உறுப்புகளுக்கு அனுப்பப்படுகிறது."

இந்தக் கொள்கைகள் எல்லாம் தவறு என்பதை ஹார்வி எடுத்துக் கூறினர். புழு, பூச்சி, மீன், தவளை போன்ற சுமார் நாற்பது வகைப் பிராணிகளை அறுத்து அவர் சோதனை செய்தார். சிரைகளில் இருக்கும் வால்வுகள் எல்லாம் ஒரு பக்கமே திறப்பவை என்பதை அவர் கண்டார். மேலும், இதயத்தை விட்டு வெளியே செல்லும் இரத்தம் இடது பக்கம் கீழறையிலிருந்து ஒரு பக்கமாகவே செல்வதையும் அவர் கவனித்தார். இதயத்தின் கனபரிமாணத்தையும் அதன் துடிப்புகளையும் அவர் கணக்கிட்டார். இதயம் ஒரு நிமிஷத்தில் சுமார் எழுபத்திரண்டு தடவை துடிக்கிறது. கணக்கிட்டுப் பார்த்ததில் ஒரு மணி நேரத்தில் இதயத்தின் மூலமாகச் சுமார் 540 ராத்தல் நிறையுள்ள இரத்தம் போகிறது என்பது தெரிய வந்தது. இத்தனை இரத்தமும் எங்கேயிருந்து வந்து எங்கே செல்கிறது? குறிப்பிட்ட அளவு இரத்தமே திரும்பத் திரும்ப உடல்பூராவும் தொடர்ச்சியாகப் பாய்கிறது என்பதையும் அது இதய மூலமாகவே நடக்கிறது என்பதையும் ஹார்வி கண்டு பிடித்தார். இருதயம் ஒரு 'பம்ப்' மாதிரி சுருங்கியும் விரிந்தும் வேலை செய்து கொண்டே இருக்கிறது

உடம்பின் எல்லாப் பகுதிகளிலும் உள்ள கெட்ட இரத்தம் முழுவதும் இதயத்தின் வலது மேலறைக்கு வந்து, பின்னர் வலது கீழறைக்கு வருகிறது. அங்கிருந்து 'பல்மனரி தமனி'

என்னும் குழாய் வழியாக நுரையீரல்களை அடைகிறது. நாம் சுவாசிக்கும் காற்று நுரையீரல்களுக்குப் போகிறது. அங்கே கரியமிலவாயுவைத் தள்ளிவிட்டுப் பிராணவாயுவை எடுத்துக்கொண்டு சுத்தம் அடைந்தபின்னர் இரத்தம் 'பல்மனரிசிரை' வழியாக இதயத்தின் இடது பக்க மேலறைக்கு வருகிறது. அங்கிருந்து இடது கீழறைக்கு வந்து பல உறுப்புகளுக்கு நல்ல இரத்தக்குழாய்கள் மூலமாகச் செல்லுகிறது. உறுப்புகளின் முடிவுகளில் நல்ல இரத்தக் குழாய்களிலிருந்து கெட்ட இரத்தக் குழாய்களுக்கு இரத்தம் எப்படி மாறுகிறது என்பதை ஹார்வி நேரடியாகப் பார்க்கவில்லை. ஏனெனில், அப்போது பொருள்களைப் பல மடங்கு பெரிதாகக் காட்டும் சூக்ஷ்மதரிசனி வழக்கத்திற்கும் வரவில்லை ஆனாலும், அப்படித்தான் நடக்க வேண்டும் என்று ஹார்வி சொன்னார்! ஹார்வி இறந்து நாலைந்து ஆண்டுகளுக்குப் பிறகு மால்ஃபைஜி, லீவன்ஹாக் என்பவர்கள் சூக்ஷ்ம தரிசினி மூலமாகப் பார்த்ததில் மிக நுண்ணிய குழாய்களில் அந்த இரத்த மாற்றம் நிகழ்வதைக் கண்டார்கள்.

இருதய அறைகளுக்கு இடையில் உள்ள ஜவ்வுமூலமாக இரத்தம் கசிய முடியாது என்பதையும் ஹார்வி எடுத்துக் காட்டினார். அந்த இடைச் சவ்வு கெட்டியாக இருக்கிறது; மேலும், இடைச் சவ்விலேயே இரத்தக் குழாய்கள் இருக்கின்றன. அதன்மூலமாக இரத்தம் கசிவதானால் அதில் இரத்தக்குழாய்கள் எதற்கு? ஒரு நாயின் இதயத்தையே அறுத்து இடைச் சவ்வு மூலமாக வலது கீழறையிலிருந்து இடது கீழறைக்கு இரத்தம் வருவதில்லை என்று கண்கூடாகக் காட்டினார் ஹார்வி.

தவிரவும், பிராணிகளில் கரு எவ்வாறு வளர்கிறது என்பதைப் பற்றியும் அவர் ஆராய்ந்திருக்கிறார். அவருடைய பரிசோதனைகளுக்காக ஏராளமான மான்கள் நிறைந்துள்ள தோட்டங்களை முதலாவது சார்ல்ஸ் மன்னன் அவருக்குக் கொடுத்தானாம்! முட்டையில் கரு வளர்ச்சிக்கு எப்படி நிகழ்கிறது என்பதை அவருடன் அந்த அரசனும் கவனித்தானாம்!



முந்திரிப் பருப்பு

பி. ஐ. பி.

உலக வர்த்தக மார்க்கெட்டில் முந்திரிப்பருப்பு வியாபாரத்தில் இந்தியாவே முதலிடம் வகிக்கிறது இங்கிருந்துதான் அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படுகின்றது, அதாவது உலக ஏற்றுமதியில் 90 சத வீதம் நம்முடைய நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிறது. முந்திரிப்பருப்பு மூலம் இந்திய கஜானாவுக்கு வருஷந்தோறும் 12.8 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. 1951ம் வருஷத்தில் முந்திரிப்பருப்பு ஏற்றுமதி மாத்திரம் 20 லட்சம் டாலரை இந்தியாவுக்குத் தேடித் தந்திருக்கிறது. அவ்வருஷம் தேயிலை ஏற்றுமதியில் கிடைத்த தொகை 1[illegible] லட்சம் டாலர் தான். பருப்பு மாத்திரமன்றி, முந்திரிக் கொட்டைத் தைலமும் முக்கிய ஏற்றுமதிப் பொருளாகும். அதன்மூலம் ஆண்டொன்றுக்கு 60 லட்சம் ருபாய் கிடைக்கிறது.

இந்தியாவில் வருஷத்துக்கு சுமார் 60,000 டன் முந்திரிக் கொட்டை உற்பத்தியாகிறது. உற்பத்தியில் இந்தியாவுக்கு உள்ள ஸ்தானம் பங்கமுருமல் இருந்து வருகிறது. அமெரிக்காவும் பிரிட்டனும் முந்திரிப் பருப்பை வாங்குகிற பிரதான நாடுகள் இந்திய உற்பத்தியில் 75% அங்கேதான் செல்கிறது. மீதி இந்தியாவில் உபயோகமாகிறது.

பம்பாய்க்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட கடல் பிரதேசத்தில் தான் முந்திரிப் பருப்பு அமோகமாகப் பயிராகி வருகிறது. சென்னை, ஆந்திரா முதலிய இடங்களிலும் அது ஓரளவுக்குப் பயிராகிறது. சிறிய தோட்டம் முதல் சுமார் 800 ஏக்கரா விஸ்தீரணமுள்ள பெரிய தோட்டம் வரையில் பலபடியான பிரதேசத்தில் அது பயிரிடப்படுகிறது. ஏக்கராவுக்கு சராசரியாக 110 ருபாய் வீதம் லாபம் கிடைக்கிறது. உச்சபட்சமாய் 300 ரூபாய் வரையில் கிடைக்கும். மொத்தம் சுமார் 2.2 லட்சம் ஏக்கராவில் இந்த மரம் வளர்க்கப்பட்டு வருகிறது. கடல்மட்டத்திலிருந்து 2000 அடி வரையில் உள்ள பலதரப்பட்ட பூமிகளிலும் அது வளரும். அதற்கு அதிக மழை தேவையில்லை. 35–130 அங்குல மழை உள்ள பிரதேசங்கள் அதற்குப் போதும்.

ஆலமரம் போல் தாழ்ந்து பரந்து வளர்கிற மரம் அது.

மூன்ருவது, நாலாவது வருஷத்தில் அது பலன் தர ஆரம்பிக்கும். அது, 30-40 வருஷம் தொடர்ந்து பலனளிக்கும். நவம்பர்–பிப்ரவரி காலத்தில் பூப்பிடிக்கும். மார்ச்-மே காலத்தில் காய் காய்க்கும். மரத்திலிருந்து கீழே விழுகிற கொட்டைகளைச் சேகரிப்பதுதான் சாதாரண வழக்கம். சராசரியாக ஒவ்வொரு மரத்திலிருந்தும் 20-30 பவுண்ட் பழம் கிடைக்கும். உச்ச பட்சமாய் 50 பவுண்ட் வரை கிடைக்கும்.

முந்திரி மரத்தைத் திட்ட வட்டமாகப் பயிர் செய்ய வேண்டும். 20 அடிக்கு ஒரு குழிவீதம் வெட்டி அதில் விதை போட வேண்டும். நவீன வேலை முறைகள் மூலம், உயர்தர மாசூல் மரங்களைத் துரிதமாய்ப் பயிர் செய்யலாம்.

சாதாரணமாக மணலுடன் சேர்த்து முந்திரிக்கொட்டையை வறுப்பது தான் பக்குவமுறை, திறந்த இரும்புச் சட்டியிலாவது, மண் சட்டியிலாவது, தொழிற்சாலைகளிலாவது அதை வறுத்துத் தயாரிப்பதும் உண்டு. பிறகு கொட்டையிலிருந்து தோடு உடைத்து அகற்றப்படும். முந்திரிப்பருப்பில் முழுசாக உள்ளவை தனியாக எடுக்கப்பட்டு தரப்பாகுபாடு செய்யப்படும். சராசரியாக 9,700 பவுண்ட் கொட்டையிலிருந்து ஒரு டன் பருப்பு கிடைக்கும். அதில் 70% முழுசாகவும், 20% உடைந்தவையாகவும், 8% மட்டமாகவும், 2% நிராகரிக்கப்பட்டவையாகவும் இருக்கும்.

வாதம்பருப்பைப் போலவே முந்திரிபருப்பும் அதிக போஷணைச் சத்துள்ளது. அதில் ப்ரொட்டீன் சத்து அதிகம் (21%); கொழுப்புச் சத்தும் (46·9%) இருக்கிறது. பாஸ்பரஸ், இரும்பு, ஏ. பி1, பி2 வைட்டமின் சத்துக்கள் முதலியவையும் அதிகம் உண்டு.

பருப்புக்கடுத்தபடி முந்திரித் தோட்டுத் தைலம் முக்கிய வியாபாரப் பொருள். வார்னீஷ்கள், தளவரிசைச் செங்கல்கள், தரை மெழுக்கு, சிமிட்டி ரகங்கள், ஒட்டுப்பசைகள், பசைக்குரிய வர்ணங்கள், மை, சாயம், நீர் புகாத தாள், எனுமல் முதலியவை தயாரிக்க அது உதவும்.

முந்திரிப் பழத்தைத் தின்னலாம்; அதில் "சி" வைட்டமின் இருக்கிறது. அதில் மருந்துக் குணம் இருக்கிறது. கொட்டைத் தோட்டை எரிக்கலாம். பருப்புத் தொலியைக் கோழிகளுக்கு இரையாகப் போடலாம்.

அறிவிப்பு

தவிர்க்க முடியாத சில காரணங்களால் திரு. எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் எழுதும் 'வெட்சியும் கரந்தையும்' கட்டுரைத் தொடரின் 5-ம் கட்டுரையை இம்மாதம் வெளியிட முடியவில்லை. வருந்துகிறோம். அடுத்த மாத இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும்.

ஆசிரியர்.

சிறுகதை

வெற்றியின் ரகசியம்

●

துர்க்கனேவ்

அவன் ஒரு அசடு. தன்வாழ்வின் பெரும் பகுதியைச் சந்தோஷமாகவே கழித்தான். தனக்கு மூளை கிடையாது, தான் ஒரு முட்டாள் என்று பிறர் தன்னைப்பற்றி நினைப்பதை வதந்திகள் மூலம் மெள்ள மெள்ள அறிந்தான்.

இதை அறிய அவனுக்கு வருத்தமாயிருந்தது. விசனத்தோடு, தன் மனத்துக்குப் பிடிக்காத வதந்திகளை எப்படிப் போக்குவது என்பதைப் பற்றி யோசிக்கலானுன்.

சட்டென்று, அவனுடைய மந்த மூளையில் ஒரு யோசனை பளிச்சிட்டது.

மேலும் காலத்தை வீணுக்காது, அந்த யோசனைப்படி நடக்க ஆரம்பித்தான்.

அதே தினம் அவன் நண்பன் ஒருவனை நடுத்தெருவில் சந்தித்தான். நண்பன், பிரசித்தி பெற்ற ஒரு சித்திரக்காரனைப் பற்றிப் புகழ ஆரம்பித்தான். உடனே அந்த அசடு, ஆச்சரியம் தொனிக்கும் குரலில் " அட கடவுளே! அந்தச் சித்திரக்காரனுக்கு இப்போதெல்லாம் மதிப்பு எது ? அவன் காலம் மாறிவிட்டது. இது உனக்குத்தெரியாதா? நீ இப்படிப் பேசுவாயென்று நான் எதிர்பார்க்கவேயில்லை. நீ ஒரு பிற்போக்குடையவன்" என்று கூறிஞன்.

நண்பனுக்கு இதைக் கேட்டதும் மிகுந்த அவஸ்தையாய்ப் போய்விட்டது. அந்த அசடு சொன்னதை அப்படியே ஆமோதித்துத் தொலைத்தான்.

கொஞ்சநாள் கழித்து அவனைச் சந்தித்த இன்னெரு நண்பன் "நான் இன்று படித்துக் கொண்டிருக்கும் புத்தகம் அற்புதமாயிருந்தது" என்று அவனிடம் கூறிஞன்.

அசடு பழைய ஆச்சரியம் கலந்த குரலில், "அட ராமா! வெட்கமில்லாமல் சொல்லுகிருயே! அது ஒரு உதவாக்கரைப் புத்தகம், யாருமே இப்போது அதைப் படிப்பது கிடையாதே. உனக்கு இது தெரியவில்லையே. நீ மிகவும் பிற்போக்குடையவன்" என்ருன்.

அந்த நண்பனுக்கு என்னவோ போல் இருந்தது. அசடு சொன்னதைச் சரியென்று ஒத்துக் கொண்டான்.

அவனைச் சந்தித்த இன்னெரு பேர்வழி, "எனது நண்பன் ந. நா. அருமையான

மனிதன். உண்மையில் அவனைப்போல உயர்ந்த மனிதன் கிடைக்க மாட்டான்" என்று தன் சிநேகிதனைப் பற்றி அளக்க ஆரம்பித்தான்.

அசடு பேச ஆரம்பித்தான். ஆச்சரியத்தோடு "அட கடவுளே! அந்த ந. நா. சுத்த அயோக்கியன். அவன் தன்குடும்பத்தை ஓட்டாண்டியாக்கி விட்டான். இந்த விஷயம் தெரியாதவர் கிடையாதே. நீ சுத்தபிற்போக்குடையவன்" என்ற ஒரு போடு போட்டான்.

அந்தப் பேர்வழி ஒரு எக்கச்சக்கமான நிலைமையில் தான் இருப்பதை உணர்ந்தான். அசடு சொன்னதை ஏற்றுக்கொண்டு தன் சிநேகிதனைக் கைவிட்டான். தன்னெதிரில் யாராவது ஒருவனைப் பற்றியோ, அல்லது ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றியோ புகழ்ந்தால் போதும். அவன் இந்த ஒரே பதிலைத்தான் விட்டெறிவான். சில சமயங்களில் கடிந்து கொள்ளும் பாவனையில், "இன்னமும் அதிகாரத்தில் நீ நம்பிக்கை வைத்திருக்கிருயா ?" என்று அவன் அநேகரைக் கேட்டதுண்டு.

"அவன் ஒரு முரடன். துர்க்குணம் படைத்தவன். ஆனாலும் எவ்வளவு சிறந்த மூளை அவனுக்கிருக்கிறது!" என்று மக்கள் அவனைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். "அவனுடைய நாவன்மைதான் எப்பேர்ப்பட்டது!" என்ருர்கள் சிலர். ஆம், உண்மையாகவே அவன் ஒரு திறமைசாலிதான் என்று அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

ஒரு பத்திரிகையின் ஆசிரியர் மதிப்புரை எழுதும் பகுதியை மேற்கொள்ளுமாறு அவனை அழைத்தார்.

எதாயிருந்தாலும் சரி, யாராயிருந்தாலும் சரி, அசடு ஒரேயடியாகக் கண்டித்து எழுத ஆரம்பித்தான். ஒருபொழுதும் அவன் தன் நடையை மாற்றவோ அல்லது தன் தாக்குதல் வேகத்தைக் குறைக்கவோ இல்லை.

அதிகாரத்தையும், அதிகார வெறியையும் சதா கண்டித்துக்கொண்டிருந்த அவனே இப்போது ஒரு அதிகார வெறியனுகிவிட்டான். இளைஞர் அவனை வணங்கினுர்கள், அவனைக் காண நடுங்கினர்.

இளைஞர்களால் வேறு என்னதான் செய்ய முடியும்? பொதுவாகப் பார்த்தால், யாரும் யாரையும் வணங்கக் கூடாதுதான். ஆனல் இவன் விஷயத்தில் அப்படியில்லையே! அவனேடு மாறுபட்டவர்கள் பிற்போக்கு உடையவர்களாகிவிட மாட்டார்களா? இப்படியிருப்பதனுல்தான் கோழைகளைக் கொண்டு அசடுகளும் வயிறு வளர்க்க முடிகிறது. —'சக்தி'

புதுமைப்பித்தன்

(4)

ஆர். கே. கண்ணன்

★

"பக்த குசேலா" நாடகத்தில் மக்கி மடிந்து வரும் பழைய பண்புகளையும், "புதிய நாகரீகத்தின்" பாற்பட்ட பண்புகளையும், புதுமைப் பித்தன் வெற்றிகரமாய்ச் சித்திரத்தைப் பற்றி சென்ற தடவை எழுதினேன்.

அதே பொழுதில், சமுதாய அழுக்கு மூட்டைகளுடன் சமுதாயத்தையும் சேர்த்து ஒரேயடியாக அவர் நிராகரித்து விடுவதையும் அதே கதையில் பார்க்கலாம்

தொழிலாளர் வேலை நிறுத்தம் அக்கதையில் ஒரு கேலிச் சித்திரமாக விழுகிறது மட்டுமல்ல.

"தனியொருவனுக்கு உணவில்லை யெனில் ஜகத்தினை யழித்திடுவோம்" என்று பாரதி "பஜனை கோஷ்டி" ஒன்று தெருவில்பாடிச் செல்வதாக ஒரு இடத்தில் அவர் குறிக்கிறார். எவ்வளவு பஜனை கோஷ்டிகள் இப்படிப் பாடித்திரிந்தாலும் பிரயோஜனமில்லை என்று குசேலர் குடும்பத்தின் வறுமையைக் காட்டி புதுமைப்பித்தன் கேலி செய்கிறார். முதலாளி சர்மா குசேலருக்கும், அவர் குடும்பத்துக்கும் அபயம் அளிக்கும் வழியோ? அது இயல்பாய், "யதார்த்தமாய்" தெரிகிறது புதுமைப்பித்தன் கண்ணுக்கு.

"திருக்குறள் செய்த திருக்கூத்து" என்ற கதையில் போலீஸ் அதிகார வர்க்கத்தின் மரமண்டைத்தனத்தைப் பிரமாதமாகச் சித்திரிக்கும் புதுமைப்பித்தன், மாணவர்களின் இயக்கத்தையும் கேலி செய்யாமல் விடவில்லை.

சமுதாயக் கேடுகளையும், கட்டுப் பாடுகளையும் உடைத்துக் கொண்டு, புதியபண்புகளை நாடிச்செல்லும் சமுதாயம் கலப்பு மணத்தைக் கைக் கொள்வதை ஆதரித்து, ஊக்குவித்து கவிச் சக்ரவர்த்தி பாரதி ஒரு இலட்சியச் சித்திரம் வரைந்தானல்லவா? பாரதியின் அந்தக் கதையை எடுத்துக்கொண்டு அதன் முடிவைச் சொல்ல வந்தவர் போல புதுமைப்பித்தன் 'கோபாலய்யங்கார் மனைவி" என்று ஒரு கதை எழுதியுள்ளார். கலப்பு மணத்தைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை

அதைப் படித்துவிட்டுச் சொல்லுங்கள்.

இலட்சியங்கள் என்கிற விக்ரஹங்களை உடைத்தெறிவதில் புதுமைப்புத்தனுக்கு ஒரு அலாதி உற்சாகம்.

ஏனெனில், இலட்சியங்கள் அற்றவர் அவர். இலட்சியங்கள் பொய் என்பவர் அவர்.

"சிற்பியின் நரகம்" என்ற கதையில் தானே நிர்மாணித்த சிலையை உடைத்தெறிய சிற்பி துடிக்கிருன். காரணம், சிற்பியையும் சமுதாயத்தையும் எதிரெதிரே நிறுத்தி மக்கள்பால் பகைமையும் தன் சிருஷ்டியின் பால் வெறுப்பும் கொள்ளச் செய்கிருர் புதுமைப்பித்தன். மதப்பற்றும், பக்தி உணர்ச்சியும் மோட்சவரம் கோரும் வேட்கையும், மக்களின் அழகு நுகர்ச்சி சக்திக்கு இடமில்லாதபடி செய்துவிடுகிறது என்று பொருள்படும்படி காட்டுகிருர். இது மனிதனின் சரித்திர அனுபவத்துக்கு முற்றிலும் முரணான சங்கதி. கலையின் வளர்ச்சி வரலாறு தெரிந்தவர்கள் இதை ஏற்க மாட்டார்கள்.

பிறகு சமுதாயத்தைப் பகைவனாகப் பார்க்கும் சிற்பி, சிலையை உடைக்காமல் வேறென்ன செய்ய முடியும்?

குருட்டுப் பக்தி மக்களின் கலையுணர்ச்சியைக் கட்டுப்படுத்தவில்லை, மட்டுப்படுத்தவில்லை. ஆதிகாலத்தில் இரத்த பலி கேட்கும் பயங்கர தேவதைகளைப் படைத்த அதே மனிதன் தான், தனது முயற்சியால் நாகரிகம் அடைய அடைய, கிருஷ்ண விக்ரஹங்களையும், நடராஜனையும், கோபிகைகளையும், எண்ணற்ற துவாரபாலகர்களையும் சிற்பங்களில் வடித்துதனது உள்ளத்திலூறும் அழகுணர்ச்சியை வெளியிட்டு நமக்கு இறவா புகழ் தேடித் தந்துள்ளான்.

இவ்வரலாற்றை புதுமைப் பித்தன் மறுத்து விடுகிருர்.

"புரட்சி மனப்பான்மை" என்ற கதையில் புரட்சிக்காரர்களை நையாண்டி செய்கிருர். சரி, ஏதோ அவருக்கு அவர்கள் பிடிக்கவில்லை போலும் என்று நினைக்கலாம். ஆனால், நாட்டுக்கு உழைப்பது முட்டாள் தனம், விடுதலைப்போர் என்பது வீண் பிரமை என்று பறையடிக்கிருர் புதுமைப்பித்தன்.

"கட்டில் பேசுகிறது" என்கிற கதையில், சாகக்கிடக்கும் ஒரு இளம் சத்தியாக்கிரகியை மரணதேவதை கேலி செய்வதைக் கேளுங்கள் :—

"அவன் ஒரு சிறு பையன்... சத்தியாக்கிரகி! வயிற்றில்... தடிக்கம்புக்குத்து. அவனுக்கும் வைத்தியம் நடந்தது. பாவி எமனும் அவனைப் பார்த்து அன்னநடை நடக்கிருன்! பையனுக்குச் சாவின் மேல் என்ன ஆசை! நெஞ்சில் குண்டு படவில்லையே என்ற பெரிய ஏக்கம் அதே புலம்பல்தான்,... சாவைக் கண்டதும் என்ன உற்சாகம், காதலியைக் கண்டது போலத்தான். என்னமோ, "ஸுஜலாம், ஸுபலாம்," என்று

ஆரம்பித்தான். குரல்வளையில் கொர்ர் என்றது...பிறகு என்ன! ஹி ! ஹி !! ஹி !!"

முடிவில் அந்த மரண தேவதை சொல்கிறது :—

" நான் யார் தெரியுமா ? சூ! கோழை, பயப்படாதே !

"நான் ஒரு போல்ஷெவிக் (அபேதவாதி). ஹி ! ஹி! ஹி!"

மனிதனைச் சம நிலையில் வைக்கும் சக்தி—மரணம். அது ஒன்று தான். அதன் பெயர்—போல்ஷெவிக். மரணம்தான் உண்மையான சோஷலிஸம். மற்றவை எல்லாம், இளஞ் சத்தியாக்கிரகியின் சித்தப் பிரமை !

காலனைக் கேலி செய்தாள். புதுமைப்பித்தனின் கிழவி, —தெரியாத்தனமாய்! இங்கே, காலன் கேலி செய்கிறான், இலட்சியங்களை !

"வாடா மல்லிகை" என்கிற கதையில் விதவைப் பெண் நேர்மையான மறுமணத்தை நிராகரித்து, கள்ளத்தொடர்பை விரும்புவதாகக் காட்டி அது கிடைக்காததால் தற்கொலை செய்து கொள்வதாய் காட்டியுள்ளார் புதுமைப்பித்தன். காரணம், அவ்விதவைப் பெண் இலட்சியங்கள் பொய் என்கிறாளாம்! கள்ளத்தொடர்போடு நின்றுகொள்வோம் என்கிறாளாம்! எவ்வளவு அசம்பாவிதம்! இப்படியும் ஒரு இளம் விதவை இருப்பாளா என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது. இவ்வாறு ஒரு முடிவு குறிக்கப்பட்டதற்குக் காரணம் கேட்டால், இலக்கியத்திலுமா புரோகிதர் வேலை செய்துகொண்டிருக்க வேண்டும் என்று புதுமைப் பித்தன் திருப்பிக் கேட்கிறார்.

மக்களின் போராட்டத்தையும், இலட்சியங்களையும் கேலி செய்வது மட்டுமன்றி, அந்தப் போராட்ட இயக்கத்தினிடையே யெழும் புதிய பண்புகளையும் புதிய நெறிகளையும், புதிய ஒழுக்கங்களையும் ஒருங்கே கேலி செய்து நிராகரிக்கிறார், புதுமைப் பித்தன்.

போர்! சமுதாயப்போர்! அது தான் ஊற்றுக் கண்—புதிய பண்புகளுக்கு, புதிய வாழ்வுக்கு, புதிய மனிதனுக்கு! திருப்பாற் கடலைக் கடைந்த மாதிரி சமுதாயத்தை மக்கள் கடைந்து கொண்டேயிருக்கிறார்கள், இருப்பார்கள். அதிலிருந்து பாசிஸம் என்ற ஆலாகல விஷம் தோன்றலாம், அதைப் பருகி தொண்டைக் குழியில் நிறுத்தி வென்று விடுவார்கள். கருமையான மருதான் மிஞ்சும் கடைந்ததிலிருந்து பொதுவுடமை என்ற அமிர்தம் தொன்றும், அதைப் பங்கிட்டுப் பருகி அமரத்துவம் பெறுவார்கள். அமரத்துவம் என்றால்? மனிதன் மனிதனாக வாழ்வான், என்றே நான் பொருள் கொள்கிறேன். அதில் தான் அமரத்துவம் அடங்கி யிருக்கிறது.

இவ்வியக்கத்திற்கு அப்பாற்பட்டு புதிய பண்புகள் தோன்றுவதில்லை—தோன்றியதில்லை. எனவே சமுதாயப் போர் தான் தாய்! புதிய பண்புகள், புது மனிதன், புதிய ஒழுக்கங்கள்

எனப்பட்டவை அந்தத் தாயின் செல்வக் குழந்தைகளே! தாயையும், சேய்களையும் நிராகரித்து நிராதரவாய் விட்டு விலகிப் போனால்?

உலகம் பாழ் வெளி தான்! அப்படித்தான் காட்சியளிக்கும்.

புதுமைப்பித்தனின் பார்வையும், இலக்கிய விசாரமும், இலக்கிய படைப்புகளும், இந்த முடிவுக்குத் தான் வருகின்றன.

அவர் காலத்திற்கு முந்திய பாரதி அப்படிச் செய்யவில்லை. அவர் காலத்தில் வாழ்ந்த தாகூரும், பிரேம்சந்தும் அப்படிச் செய்யவில்லை. அவர் காலத்தில் வாழ்ந்த கார்க்கியும், ஹென்ரி பார்பசும், ரொமான் ரொலானும் மற்றவர்களும் அப்படிச் செய்யவில்லை. மேலும் மேலும் கலைஞர்கள் சமுதாயப் புரட்சியில் கலந்தார்கள். அது சிருஷ்டித்த புதிய பண்புகளை இலக்கியங்களில் சித்திரித்தனர். சமயம் வரும்போது, தேவையேற்பட்டபோது, சர்வதேசப் படையில் சேர்ந்து ஸ்பெயினில் பாசிஸத்தை எதிர்க்க பேனாவை வைத்துவிட்டு துப்பாக்கி ஏந்திச் சென்றார்கள். நேரு அந்த ஸ்பெயின் போர்க்களத்திலிருந்தார். முற்போக்கு உலகம் முழுவதும் அங்கு நின்று போர்வீரர்களை வாழ்த்தி உற்சாகப்படுத்தியது.

சில ஆல்டஸ் ஹக்ஸ்லிகளும் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்களும் மட்டுமே தனி நபர் தத்துவம் பேசி, சம்சய வாதம் பேசி, போரில் "நடு நிலைமை" வகித்தனர். அவர்கள் என்னென்னத்தைத் தான் பேசவில்லை! காரியத்திலோ என்றால், பாசிசம் ஜெயித்தாலென்ன, தோற்றாலென்ன என்று வஞ்சித்து விட்டார்கள்.

பாரதத்தின் விடுதலைக்காகவும், சீனாவின் விடுதலைக்காகவும் போராடியதும், ஜப்பானிய பாசிஸத்தை எதிர்த்து ஆசிய மக்களை எச்சரித்ததும் யார்? "கீதாஞ்சலி" பாடிய அதே வாய் தான்!

நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதில் யாருக்கு என்ன பயன்?

"நடு நிலைமை" வகிப்பதாகச் சொல்லிக் கொண்டு, போர்க்களத்திலிருந்து ஓடி விடுவதும், இலட்சியங்களை கேலி செய்வதும், மக்களிடமிருந்து பிரிந்து விடுவதும் என்ன பயன் தரும்?

இந்தப் பார்வை புதுமைப்பித்தனை பழிவாங்கி விட்டது. அவரது இலக்கியத்தையும் பழிவாங்கி விட்டது.

வாழ்வை இலக்கியம் பழித்தால், இலக்கியத்தை வாழ்வு பழி தீர்த்து விடும்.

கட்டுண்ட உள்ளங்கள் (மனித யந்திரம்), வெட்டுண்ட உரிமைகள் (காளி கோவில்),— எவ்வளவு திறமையாக அவற்றைச் சித்தரிக்கிறார் புதுமைப்பித்தன்.

விமானப்போர் அபாயத்திற்குப் பயந்து ஓடும் மனிதமந்தையையும், அபாயச் சங்கொலியின் ஆதரவில் வழும் வாழ்க்கையையும் எவ்வளவு அற்புதமாகப்

படம் பிடிக்கிருர், "படபடப்பு" என்கிற கதையில்!

"கயிற்றரவு" கதையைத் தான் பாருங்கள். பற்றறுத்த பரமசிவம்பிள்ளேயின் மனத்தில் புகுந்து, பிள்ளேயவர்களின் சிந்தனேச் சலனங்களே—கோர்வையாயும், கோர்வையற்றும், ஓடியும், துள்ளியும், நெளிந்தும், நிமிர்ந்தும், மனித யோசனே செல்லுமே, அதை—அப்படியே இயல்பாகத் தமிழ் மொழியில் செதுக்கித்தந்து வெற்றி கண்ட முதல்வர் புதுமைப்பித்தன். வேறு யாரும் இப்படி முயற்சித்ததுமில்லே; முயற்சித்தும் இவ்வளவு அனுயாசமாய் வெற்றி கண்டதுமில்லே. என்னேயறியாமலேயே, ஜேம்ஸ் ஜாய்ஸ் ஞாபகத்துக்கு வருகிருர்.

அரிமர்த்தன பாண்டியன், வாதவூரர், பிட்டுக்கு மண் சுமந்த சிவனுர், நரிபரியான கதை—நடந்ததோ, நடக்கவில்லேயோ, புராணக் கற்பனே என்றே வைத்துக் கொள்ளுங்கள், அவர்களே வைத்து புதுமைப்பித்தன் தீட்டியுள்ள குணச்சித்திரங்களேயும் மனப்போரையும் "அன்றிரவு" என்ற கதையில் படித்துப் பாருங்கள். ஒரு சிருஷ்டியின் மனத்திற்குள் புகுந்து அத்துடன் ஒன்றிவிடும் ஆற்றலும், அச்சிருஷ்டிகளின் சூழ்நிலேயில் தானே ஐக்கியமாகி விடும் திறனும் புதுமைப்பித்தனுக்குக் கொள்ளே கொள்ளேயாய் கிடைத்திருந்தது என்பது தெரியும்.

அப்படிப்பட்ட புதுமைப் பித்தன்...

அம்மாளு (மில்லில் வேலே செய்யும் பெண் தொழிலாளி) யைக் காண்கின்ருர்; படம் பிடிக்கிருர். அம்மாளுவின் இருதயத்திற்குள் புகுந்து அவளின் உள்ளொளியைக் காட்ட முடியவில்லே. இன்னொருவனுடன் சேர்ந்து கொண்டு அம்மாளு இருளில் மறைகிருள்—முக்கால் ரூபாய் சம்பாதித்து, புருஷனுக்குக் கஞ்சி வார்க்க. தூரத்தில் நின்று அம்மாளுவைப் பார்க்கிருர் புதுமைப்பித்தன். தான் வேறு; அவள் வேறு. அந்த நேரத்தில் அம்மாளுவின் அந்தரங்க உணர்ச்சிகளே, இருதயத்தில் எழுந்து குமையும் குமுறல்களே, காட்டுவதற்கு ஒரு வரி கிடையாது. அப்புறம், "இது தானய்யா பொன்னகரம்" என்று பொதுப்படையாகக் கூறி விடுகிருர்.

இது தாஞ பொன்னகரம்? என்று நமக்குக் கேட்கத் தோன்றுகிறது. அம்மாளு மனத்திலெழும் குமுறல்களும் பொன்னகரத்தின் ஒரு பகுதி. பார்க்கப்போனுல், அவை தான் உண்மையான பொன்னகரம். அவை தான் பொன்னகரத்தை உண்மையிலேயே பொன்னகரமாக்கச் சக்தி பெற்றவை. அம்மாளு காலத்திய (1933) பொன்னகரமும் சரி, பின்பு இயங்கி வரும் பொன்னகரமும் சரி—"இது தானய்யா" என்ற தீர்ப்புக்குக் கட்டுப்பட மறுக்கின்றன.

இந்த உள்ளக் குமுறலே ஒரு

எரிமலையாகச் சித்தரித்தான் சார்லஸ் டிக்கென்ஸ். ஸ்ரீமதி டாபார்ஜ் என்கிற பெண்ணை பிரெஞ்சு நிலப்பிரபுத்துவ வம் சங்களை கருவறுக்கத் தோன் றிய மாகாளியாகச் சித்தரித் தான் டிக்கென்ஸ். தனது சகோ தரியின் கற்பையும், உயிரையும் மாய்த்ததற்காக பழிதீர்க்கக் கங் கணங் கட்டினன் ஸ்ரீமதி டிபார்ஜ்.

வாழ்க்கை கசந்து விட்ட "தாய்" ருஷ்யப் புரட் சிக்கு மக்களைத் தூண்டுவதாக சித்தரித்தான் கார்க்கி. ருஷ்யப் புரட்சியையே ஒரு தாயாகச் சித் திரித்தான் கார்க்கி.

பெண்களின் உள்ளக் குமுற லில் என்றுமே கலைஞர்களும், கவிஞர்களும் கவனஞ் செலுத்து கின்றனர். ஏனெனில், சமு தாய அநீதிகளின் அளவைக் காட்டுவதற்குப் பெண்ணினத் தின் நிலையை விடச் சிறந்த பராமிடர் வேருென்றும் இல்லை; அந்த அநீதியைச் சுட்டுச் சாம்பலாக்கும் புரட்சி ஒளிக்கும் அவளே தீபக்கால். கண்ண கியை இளங்கோவடிகள் மாகா வியமாக்கியதின் கருத்தென்ன? "பாஞ்சாலி சபதத்தை" பாரதி ஏன் படைத்தான்? பரணி பாடிய ஜெயங்கொண் டான் "கபாடத் திறப்பு" பட லத்தை முன்னிறுத்தி, போரை யும் போர்க்களத்தையும் பின் னிறுத்தியது ஏன்? நாட்டுப் பற்று, சமுதாய விடுதலை, இலட் சிய வேட்கை, சத்திய சோதனை —சகலவற்றிற்கும் தூண்டு கோல் பெண், குறிப்பாக உழைக் கும் பெண்! அவளே ஒவ் வொரு உண்மையான புரட்சி யிலும் முன்னின்று போரிட்டி ருக்கிருள்.

அன்று விடுதலை இயக்கத்தில் பொன்னகரம் என்ன பங்கு ஆற்றியது? உழைப்பாளிகளின் நல்வாழ்வுப் போரில் பொன் னகரம் என்ன பங்கு செலுத்தி யது? செலுத்திவருகிறது?

அதன் ஒரு உயிர்த்துடிப்பை யாவது, ஒரு உள்ளக்குமுறலை யாவது எங்கேயாவது ஒரு வரி யில் காட்டவேண்டுமே! இது தானய்யா பொன்னகரம் என்று கூறுவது எவ்வளவு மேலோட் டமான தீர்ப்பு!

போராடும் சமுதாயத்தையும், கருத்துக்களையும், நிகழ்ச்சிகளை யும் புதுமைப் பித்தனின் பேனு சித்தரிக்க முடியவில்லை. ஏனெ னில் அவர்களை அணுகி, அவர்களுடன் ஒன்றி விடு வதற்கு அவரால் முடிய வில்லை. அவர்களைப் பார்க்கும் போது தான் வேறு (Subject) அவர்கள்வேறு(Object) என்றே விலகி நின்று, தெருவிளக்குக் கடியில் இருந்து கொண்டோ, முச்சந்தியின் ஓரத்தில் நின்ருே, கண்ணுல் பார்த்த காட்சியாய் சித்திரம் தீட்டிவிட்டுச் சென்று விடுகிருர்.

"கயிற்றரவு" பரமசிவம் பிள்ளையையும், "மனித யந்தி ரம்" மீனுட்சி சுந்தரம் பிள்ளை யையும், அவர்களைப் போன்ற பிறரையும் உள்ளும் புறமும் கண்டு, சித்தரித்த புதுமைப்பித்தன்

அம்மாளு விஷயத்தில், மாட சாமி வேலாண்டி விஷயத்தில் தோல்வியடைகிறார். அவர்களை யும் உள்ளும் புறமும் கண்டு கொள்ள முடியவில்லை.

எனவே, இப்படிப்பட்ட கதை களில் அவரது இலக்கியத்தின் தரம் குன்றுகிறது. உருவமும், உள்ளடக்கமும் பாதிக்கப்படு கின்றன. பாத்திரங்கள் உயிர் பெற்றெழுவதில்லை. ஒரு கருத் தைச் சொல்ல வந்து, அதற் காக மட்டுமென்றே பாத்திரத் தைச் சிருஷ்டித்தது போல இக் கதைகள் நமக்குப்படுகின்றன.

இது தற்செயலல்ல.

'புதுமைப் பித்தன் கலகக் காரர். அலாதியான கலகக்காரர். அதாவது, இலட்சியம் மறுக்கும் கலகக்காரர். இன்னொரு வகை யில் சொன்னால், கலகக்காரர் தான், ஆனல் புரட்சிக்காரர் இல்லை.

நிலப்பிரபுத்துவப் பண்புகளை நிராகரித்துப் போரிடும் கலைஞர்; முதலாளித்துவப் பண்புகளை எதிர்த்துப் போரிடும் கலைஞர். ஆனல் அவற்றை ஒழிப்பதில் நம்பிக்கையில்லை.

ஏனெனில், அவற்றை ஒழிக்க விருப்பமில்லை பழைய உலகம்— நிலப்பிரபுத்துவமும், முதலாளித் துவமும்—இருக்க வேண்டியதே. ஆனல் அவற்றின் அழுக்குகள், கோரச் செயல்கள், கொடிய அநீதிகள் இருக்கக்கூடாது. நல்லபாம்பு இருக்க வேண்டியது தான். ஆனல் நல்லபாம்புக்கு விஷம் மட்டும் இருக்கலாகாது. இதுதான் புதுமைப்பித்தனின் விருப்பம்.

ஆனல், விஷமில்லாத நல்ல பாம்பு இருக்கப்போவதில்லை— இதுவும் புதுமைப்பித்தனுக்குத் தெரியும். அதைத் தேடுவது வீண் முயற்சி. அதனல் தான் புதுமைப்பித்தனுக்கு நிராசை யும் நம்பிக்கை வரட்சியும் !

மற்றபடி அவர் காணும் பழைய உலகத்தை யொழிக்க மக்கள் முற்பட்டால், மக்கள் இயக்கமும் அவருக்கு விரோதி யாய் தெரிகிறது. ஏனெனில் அவர் அவ்வுலகை விரும்பு கிறார். அதை வைத்துக் கொண்டே அதன் அழுக்கு களைக் களைந்தெறியும் வீண் முயற்சியில்—நிராசைக் குழியில் —வீழ்கிறார்.

பழைய உலகத்தை மக்கள் நிலையிலிருந்து புதுமைப்பித்தன் பார்க்கவில்லை. அதற்குப் பதி லாக, ஒரு நிலப்பிரபுத்துவ குடும்பத்து படிப்பாளியின் நிலையிலிருந்து கொண்டு பார்த் தார். அதன் கோரத்தைப் பார்த்து வெறுத்தார் ; அது தேய்ந்து வருவதையும் பார்த் தார். அதைக்காக்க முடியாது என்றும் பார்த்தார். ஆனல் அதன் அழிவு தன் அழிவு—"தனி நபர் சுதந்திரத்தின்" அழிவு— என்று கருதினர்.

பழைய உலகம் அப்படியே இருக்கக்கூடாது ; என்றாலும், இருக்க வேண்டும்—இந்த தர்ம சங்கடமான நிலைமையிலிருந்து, மனச்சாந்தி பெறுவதற்காகத் தான் அவர் மனக்குகைக்குள்

புகுந்து விடுகிருர். "கயிற்றரவு" "மனக்குகை ஓவியங்கள்," முதலியன வெளிவருகின்றன

அப்புறம், அழகு நுகர்ச்சியே வாழ்க்கையின் இரகசியம் என்றும், இலக்கியத்தின் குறிக்கோள் என்றும், வாதிக்க ஆரம்பித்து விடுகிருர்.

அழகு என்கிற மனேமயமான மோகினித் தீவுக்குச் சென்றுவிடுகிருர். அங்கே இந்தத் தர்ம சங்கடங்கள் எல்லாம் கிடையாது. கொஞ்சம் நிம்மதி கிடைக்கும்போலிருக்கிறது. கிடைக்கிறதா? கிடைத்ததா?

தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டார்.

புதுமைப்பித்தன் கூறுவதைக் கேளுங்கள்:

"கீட்ஸின் 'எண்டிமியன்' என்ற காவியம் எந்தத் தர்ம சாஸ்திரத்தைத் தூக்கி வைக்க இருக்கிறது? அதன் ஒரு வரியின் முன்பு, உலகத்தைத் தூக்கி நிறுத்துவதற்காகப் பாடுபடும் ஷாவின் நாடகங்கள் பூராவும் நிற்க முடியுமா?" என்று கேட்கிருர் ("இலக்கியத்தின் இரகசியம்" என்ற கட்டுரையில்.)

இது ஒரு சவால் மட்டுமல்ல. இலக்கியத்தைப்பற்றிய ஒரு நிர்ணயமான தீர்ப்பு. வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்று தீர்த்துக்கட்டிய முடிவு.

கீட்ஸ் ஆங்கிலக்கவி, ஷா ஆங்கில நாடகக் கர்த்தா. இவர்களைப்பற்றி அவர் அளிக்கும் தீர்ப்பு அது.

கீட்ஸையும், ஷாவையும் படித்தவர்கள் இத்தீர்ப்பை ஏற்க மாட்டார்கள். மார்க்ஸிஸ்டுகள் நிச்சயமாக ஏற்க மாட்டார்கள்.

புதுமைப்பித்தனைப்போலவே, தர்ம சங்கடத்திலும், வாழ்க்கை ஏமாற்றங்களிலும் சிக்கியவர் கீட்ஸ். அவரும், மோகனமான மாயா உலகங்களைக் கவிதையில் படைத்திருக்கிருர். தான் விரும்பிய உலகத்தை யதார்த்த வாழ்வில் படைக்கமுடியாததால், கனவு உலகத்தில் அழகுத் தெய்வத்தைத் தொழுது நின்றவர் அவர். அதன் அழகில் என் மனத்தை அன்றும், இன்றும் பறி கொடுக்கத்தான் செய்கிறேன்.

ஷா—நான் சொல்லவா வேண்டும்?

எனக்கு கீட்ஸ் அபின் போல்; ஷா ஒரு டானிக் மாதிரி.

இருவரைப் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

இந்தப் பார்வை, இந்தத் தீர்ப்பு புதுமைப்பித்தனுக்கு இருந்ததில் வியப்பில்லை. நிலப்பிரபுத்துவ—முதலாளித்துவ உலகத்தையே "அழகு மயமான" உலகமாக, அழுக்கு நீக்கிய உலகமாகக் காண விரும்பிஞல் மாயாவாதத்தில் தான் இறங்கியாக வேண்டும். மாயா லோகத்துக்குத் தான் போக வேண்டும். கலை கலைக்காகவே என்று ஓட வேண்டும்.

எத்தனையோ கதைகள் எழுதினர் புதுமைப்பித்தன். ஒரு கதையில் மட்டும் ஒரு உழைப்பாளியின் மனப்பொந்தில் கை

விட்டுத் தடவுகிருர். அவன் ரிக்ஷாக்காரன், பெயர் குப்பன். கதை, "குப்பனின் கனவு." புதுமைப்பித்தனின் கையில் தட்டுப்படுவதென்ன? குப்பனின் கனவு என்ன?

நாலணு சவாரி கிடைக்காத நேரத்தில், குப்பன் கனவில் தான் ஒரு முதலாளியாகியதாகக் கனவு காண்கிருன். இந்தக் கனவு-முதலாளி நிஜ-குப்பனை உத்தரவிடுகிருன் :—

"குப்பா, வண்டியை வேகமா இஸ்திகினு போ...சாராயக் கடை... இல்லெடா, வெள்ளைக்காரன் குடிக்கிற எடத்துக்கு...ஒரு மிஸி கூட..."

இது தான் கனவு. உழைப்பாளியின் கனவு—முதலாளியாக வேண்டும் என்பது.

இதில் புதுமைப்பித்தனின் பார்வை, ஆசை அபிலாஷைகள், பளிங்குபோல் தெரிந்து விடுகிறது.

முதலாளி உலகம் வேண்டும். ஆனல் குப்பன்கள் இருக்கக் கூடாது. தொழிலாளியில்லாத முதலாளி உலகம், அழுக்குஅற்ற பழைய சமுதாயம் வேண்டும்.

புதுமைப்பித்தன் கலகக்காரர் என்றேன். அவர் கலகத்தின் கருத்து புரிகிறதா?

இது புதுமைப்பித்தனின் வாழ்க்கை வேட்கை. பர்வத குமாரி புரொடக்ஷன்ஸ் என்ற மோகினிப்பேய் அவரை ஆட்கொண்ட வரலாற்றைப் படித்துப் பாருங்கள்.

அந்த வேட்கையை, குப்பனின் மனத்தின் மீது ஏற்றி, ஒரு கனவாகச் சித்தரிக்கிருர்.

குப்பனுக்கும் அது கனவு தான்.

புதுமைப்பித்தனுக்கும் அது கனவாகவே முடிந்து விடுகிறது. அவர் விரும்பும் உலகம் கனவாகத்தான் இருக்க முடியும்.

இப்படிச் சமுதாயம் கனவு கண்டு கொண்டிருக்குமா?

இல்லை. வீண் கனவுகள். போராட்டம் தான் வழி, அதில் நம்பிக்கை, அதில் வெற்றி தோல்விகள், என்ருலும் கடைசியில் வெற்றி பெற்றே தீருவோம்—என்று சமுதாய சக்திகள் கணக்கு போட்டுக் காரியம் செய்கின்றன.

என்ன தத்துவமாயிருந்தாலும் சரி, நீங்கள் எவ்வளவு தான் பொய், பொய் என்று கரடியாகக் கத்தினுலும் சரி, அந்தத்தத்துவம் செயலுக்குத் தூண்டினுல்— மாற்றத்துக்குத் தூண்டினுல்— அதை மக்கள் கெட்டியாகப் பிடித்துச் செல்கிருர்கள்.

குப்பன் கனவுகளை விட, சமுதாய இயக்கத்துக்கு ஊக்கங் கொடுக்கும் தத்துவங்கள் எவ்வளவோ மேல், என்று மக்கள் உணர்கின்றனர். ஆனல் அதை ஆதரிப்பதற்குத் துணிவு வேண்டும். பழைய உலகை ஒழிப்போம் என்ற துணிவு. அந்தத் துணிவுக்குத் தூண்டுகோல், அவர்வர்களின் வாழ்க்கை நிலை, வாழ்வு பற்றிய நோக்கு.

நிலப்பிரபுத்துவப் படிப்பாளியின் நிலையிலிருந்து சமுதாயத்

தைப் பார்த்தால், அந்தத் துணிவு வராது.

அதனால் அப்படி துணிவு கொண்ட பாத்திரங்களை, துணிவு பெற்றுவரும் பாத்திரங்களை, புதுமைப்பித்தன் சிருஷ்டிக்கவில்லை. இத்தனைக்கும், அவர் வாழ்ந்த காலம் மகத்தானது. களமோ, மக்களை வைரப் படையாக்கிய களம். சாதனைகளோ, கண்ணெதிரே கைமேல் கிடைத்த சாதனைகள். புதுமைப்பித்தன் வாழ்ந்த காலத்தில் தான் நமது நாடும் விடுதலை பெற்று, புது வாழ்வு சமைப்பதில் நம்பிக்கையுடன், தொடர்ந்து போராடியது அவரே கண்டார்.

என்றாலும் அவரது இலக்கியத்தில் இந்த ஜீவிய உண்மை வெளிப்படவில்லை. ஜீவத்துடிப்புள்ள மனிதர்கள் நடமாடவில்லை.

அவர்கள் பால், அவருக்குப் பாசமோ, அனுதாபமோ இல்லை. பகைவர்கள் என்றே கருதினார். அவர்கள் கோஷித்த கோஷங்கள், தத்துவங்கள், செய்த முயற்சிகள் அவருக்குப் பகையாய்ப்பட்டன. அவற்றைக் கேலி செய்தார்.

அவர் காலத்தில், சமுதாயக் கேடுகளை கீறி அறுத்துக் காட்டியதில் புதுமைப்பித்தனுக்கு இணையாய் யாரும் இருந்ததில்லை. அவரது கத்தி புண்ணை அறுத்தது. ஆனால் ஆற்றவில்லை.

கல்கி, போன்றவர்கள் அவ்வளவு ஆழமாக தைரியமாக, நிர்த்தாட்சண்யமாக சமுதாயக் கேடுகளை அறுத்துக் காட்டவில்லை. என்றாலும் அவர்கள் புதிய இந்தியாவின் முயற்சியை, உள்ளக் கிடக்கைகளை, ஆசையபிலாஷைகளை, இலக்கியத்தில் பிரதிபலித்தார்கள். இலக்கியத்தில் ஜீவனுள்ள தேசிய ஜனநாயகப் போக்குகளையும், பண்புகளையும் வளர்த்தார்கள்.

கல்கி வழியே சென்றவர்கள் போக, இன்னொரு சாரார் பழைய உலகத்தை அப்படியே கட்டிக் காக்க முனைந்து, அதன் குரூரங்களை மறைத்து, மங்கள வாத்தியங்கள் வாசித்துக் கொண்டிருந்தனர். இவர்களைப் புதுமைப்பித்தன் சாடினார். இவர்களைச் சாடியதில் புதுமைப்பித்தனின் வலிமை தெரிகிறது. அவ்வளவுதான். கல்கி வழி சென்றவர்களுடன் ஒப்பிடும் போது, புதுமைப்பித்தனின் பலவீனம் தெரிகிறது. பழைய உலகத்தின்கேடுகளை அப்படியே சித்திரிப்பதோடு நின்று கொண்டு இயற்கைவாத இலக்கியத்தை இவர் சிருஷ்டித்தார். இது இவரை கல்கி வழி வந்தவர்களுடன் இணைக்க முடியவில்லை. அவர்கள் முகாமுக்கு எந்தவிதமான புதிய கருத்து ஆயுதங்களோ, நம்பிக்கைகளோ, கொடுத்து உதவவில்லை.

அதனால்தான், புதுமைப்பித்தன் தமிழ் இலக்கியத்தில் ஒரு மாபெரும் முகாமுக்குத் தலைமை வகிக்க முடியாமற்போய்

தனியே செல்லும் ஒரு தனி போக்காகக் காட்சியளிக்கிறார்.

இதுதான் ஒரு அராஜகவாத கலகக்காரப் போக்கு. தனி மனிதன் சமுதாயத்திலிருந்து ஓடிப்போகும் போக்கு. தான் விரும்பும் உலகைப் படைக்க முடியவில்லையே என்ற நிராசையால் ஓடிப்போகும் போக்கு.

1933-ல் புதுமைப்பித்தன் இலக்கியத்துறையில் இறங்கினார், இறங்கிய பொழுதே மக்களிடமிருந்து ஒதுங்கிச் சென்றார்.

"நாரத ராமாயணம்" என்ற புதுமைப்பித்தனின் கதையை வாசித்திருக்கிறீர்களா? அதில் இராமர் காலத்திலிருந்து நவீன காலம் வரை பாரத நாடு வளர்ந்த கதையைக் குறிக்கும் ஏடுகளைக் கண்டு பிடித்து மொழிபெயர்த்துத் தருகிறார். சீனாவில் அவர் கண்டெடுத்த செப்புப் பட்டயங்களே இக் கதைக்கு ஆதாரம்.

அக்கதையில் கடைசி ஏடுகள் 1930-32 காலத்திய உப்பு சத்தியாக்கிரகத்தையும், வட்டமேஜை மகாநாட்டையும் விவரிப்பதோடு நின்று விடுகின்றன.

ஏடுகள் அத்துடன் முடிவடைகின்றன. இந்திய சரித்திரமும் புதுமைப்பித்தனைப் பொறுத்த மட்டில், அத்துடன் நின்று விட்டது.

அதற்குப் பின் நாடு எப்படிப் போயிற்றோ தெரியாது.

காரணம், புதுமைப்பித்தனுக்கு அதன் மீத ஏடுகள் கிடைக்கவில்லை.

துரதிர்ஷ்டந்தான்!

உங்கள் பங்கு

"புதுமைப்பித்தன்" என்ற தலைப்பில் திரு. ஆர். கே. கண்ணன் அவர்கள் தொடர்ச்சியாக நான்கு கட்டுரைகள் எழுதியுள்ளார். அவரது கட்டுரைகளின் கருத்தோட்டமும், புதுமைப்பித்தனைப்பற்றிய அவரது மதிப்பீடும் அதில் தெரிகின்றன. இவற்றிற்கு மாறுபட்ட கருத்துக்களும், அபிப்பிராயங்களும் உள்ளவர்கள், புதுமைப்பித்தனை அவரவர்கள் எப்படி மதிப்பிடுகிறார்கள் என்பதைப்பற்றி தத்தம் கருத்துக்களைத் தாங்கிய கட்டுரைகளை அனுப்பிவைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம். பத்து பக்கங்களுக்கு அதிகமாய்ப் போகாமல் கட்டுரைகளை அனுப்பிவைக்கலாம். பிரசுரிக்கப்படும். ஒரு நிபந்தனை மட்டும் உண்டு—இலக்கியத்துக்கு ஒரு சமுதாய நோக்கம் உண்டு என்ற அடிப்படையில் வாதிக்கும் கட்டுரைகளுக்கே "சரஸ்வதி"யில் இடமுண்டு.

ஆசிரியர்.

சாந்தி கீதம்

★

(முகவை இராஜமாணிக்கம்)

★

பறக்குது பார் வெண்புறு—வானவீதியில் (பறக்குது)

பாந்துங் கிருந்து ஜினிவா நகர்மீது
வெள்ளிச் சிறகடித்துச் சாந்திகீதம் பரப்பிப் (பறக்குது)

(1) சோவியத் பூமியெங்கும், சீனவீதிக ளெங்கும்
தொன்மைப் புகழ்படைத்த இந்திய நாடுஎங்கும்
ஆவி குடிக்கும் யுத்தவெறியர்களை விரட்டி
அமைதிநற் கீதம்பாடிச் சாந்தியின் போதம் கூறிப் (பறக்குது)

(2) போர்ப்பகையால் உலகம் பொசுங்கிக் கருகித் தீயும் ;
புல்லர் கொழுத்துவாழப் புவியில் துயரம்மேவும் ;
ஆர்ப்பரித்தே நின்றிடும் அரசுசக்திகள் மாய்த்து
ஆனந்த வாழ்வுபெறச் சாந்தியின் இசைபாடிப் (பறக்குது)

(3) 'பலதுளி பெருவெள்ளம்'—பழமொழி உண்மையன்றோ !
பஞ்சசீலம் தழைக்கின் பாரில்சாந்தி நிலைக்கும்
அலறுவர் போர்வெறியர், அமைதி பூத்துக்குலுங்கும்
ஆனந்த சுதந்தரப் பண்ணொலி முழக்கியே (பறக்குது)